Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி -24 | 07-03-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-018

படச்சுருள்கள் அனைத்தையும் கணனி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணனி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்
படம் பிறேம்செய்தல்.

அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.

R.V
பந்தல் சேவை,
தர்மபுரம்.

(சி-9407)

## -புலிகள் அமைப்பில் இருந்து கருணா நீக்கம்-

# மட்டு-அம்பாறை விசேட தளபதியாக ரமேஸ்

# தளபதியாக ராம், துணைத்தளபதியாக பிரபா

## அரசியற்துறைப் பொறுப்பாளராக கௌசல்யன் புலிகளின் தலைமைச் செயலகம் அறிவிப்பு

(கிளிநொச்சி))

**விடுதலைப்புலிகளின் மட்டு- அம்பாறைத் தளபதியாக இருந்த கருணா அவர்கள் விடுதலைப்புலிகளின் அமைப்பில் இருந்தும் அவரது பொறுப்பிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார். இதேவேளை, மட்டு-அம்பாறை மாவட்ட விசேட தளபதியாக ரமேஸ் அவர்களும், தளபதியாக ராம் அவர்களும், துணைத்தளபதியாக பிரபா அவர்களும், அரசியற்துறைப்பொறுப்பாளராக கௌசல்யன் அவர்களும் புலிகளின் அதிகாரபூர்வ பிரதி நிதிகளாக நியமனம் செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகம் விடுத்துள்ள பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இது குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில்;

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு விரோதமாக சில தீய சக்திகளது தூண்டுதலின் பேரில் மட்டு-அம்பாறைத் தளபதியாக இருந்த கருணா அவர்கள் தமிழீழத் தேசியத் தலைமைக்கும் தமிழீழ மக்களுக்கும் துரோக மிழைத்து, தனியாகப் பிரிந்து செல்ல முற்பட்டுள்ளார். இந்த அப்பட்டமான துரோகத்தனத்தை ஏற்றுக்கொள்ளாது, அவரின் கீழிருந்த தளபதிகளும் பொறுப்பாளர்களும் போராளிகளும் அவ

(8ஆம் பக்கம் பார்க்க)



நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பு

## -மன்னார் கடற்பரப்பில் மீன் பிடித்த- தலை மன்னார் மீனவர்கள் இந்திய கடற்படையால் கைது

(கொழும்பு)

மன்னார் கடற்பகுதியில் மீன் பிடி தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தலைமன்னாரைச் சேர்ந்த மீனவர்கள் சிலரை இந்திய கடற்படையினர் கைது செய்துள்ளதுடன் அவர்களது மீன் பிடிப்படகு ஒன்றையும் தடுத்து வைத்துள்ளனர்.

இந்திய கடற்படையினர் கைப்பற்றியுள்ள படகில் மீன்களும் பல லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களும் இருந்துள்ளன.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மீகவும் வறியவர்கள் என்றும் அன்றாட சீவியத்திற்கு இவர்க

(8ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடைச் சிறையில் மீண்டும் பாதள உலகத்தவரிடையே மோதல்

### 4 சிறை அதிகாரிகள்; 20 கைதிகள் காயம்

வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதிகளுக்கிடையில் நேற்று மீண்டும் மோதல் ஏற்பட்டது. இதில் 20 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். 4சிறை அதிகாரிகளும் காயமடைந்தனர். இதனை அடுத்து கலகத் தடுப்பு பொலிசாரை தொடர்ந்து கடமையில் ஈடுபடுத்துவதென முடிவு எடுக்கப் பட்டது.

நேற்று முன்தினம் நடந்த மோதலில் 20 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் இந்த மோதல் சிறைச்சாலையின் 1ம் 2ம் அறைகளின் பாதள உலக கைதிகளுக் கும் , 3ம் இலக்க அறைபாதள உலக கைதிகளுக் கும் இடையில் ஏற்பட்டது. (32)

## செம்மணியில் மனிதப் புதைகுழியை கண்டுபிடித்த "கலோரஸ்" பணியாளர் பொலிசாரால் கைது

### "கலோரஸ்" அமைப்பு ஆட்சேபம்

செம்மணிப்குதியில் மனிதப் புதைகுழி ஒன்றைக் கண்டுபடித்து அதிலிருந்து மனித எச்சக்களை மீட்டெடுத்த "கலோரஸ்" மிதி வெடி அகற்றும் நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர் ஒருவரை சிறிலங்கா பொலிசார் கைது செய்துள்ளனர்.

மேற்படி பகுதியில் கண்ணிவெடியகற்றும் நடவடிக்கையிலீடுபட்டுக்கொண்டிருந்த மேற்படி குழுவினரால் மனித ப்புதைகுழி ஒன்றிலிருந்து எச்சங்கள் கடந்த வாரம் மீட்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இது பற்றிய விசாரணைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற சூழ்நிலையில் நேற்று இப் பணியாளர் திடீரெனக்கைது செய்யப்பட்டுள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.புறந்தள்ளப்படுவதாகக் கருணா கூறும் குற்றச்சாட்டு நகைப்பிற்கிடமானது

### மட்டு-அம்பாறை விசேட தளபதி ரமேஸ் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

மட்டு-அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் புலிகளின் தலைமையில் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர் என்ற வாதம் கருணாவின் தனிப்பட்ட முடிவு. இதேவேளை தலைவர் பிரபாகரனின் தலைமையின் கீழ் அவருக்கு அடுத்த படியாக இருந்து இராணுவத்தளபதி யாக யுத்தங்களை வழிநடத்திக்கொண்டி ருந்த கருணா, இதைவிடப் பெரியபதவி எனக் கோருவது நகைப்பிற் கிடமானது என மட்டு-அம்பாறை விசேட தளபதி ரமேஸ் நேற்றைய பத்திரிகையாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.


ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அவர்வழங்கிய பதில்கள்வருமாறு;

கேள்வி:-

உங்கள் அமைப்பில் இவ்வாறானதொரு நிலை உருவாகு வதற்கான காரணம்என்ன?

*எமது விடுதலை அமைப் புக்கென ஒரு தலைமை இருக்கிறது அதற்கு தேசியத் தலைவர் பிரபாகரன் தலைமைவகிக்கிறார். இவர்தான் எமது விடுதலை அமைப்பை தமிழீழத்தில் வழிநடத்திக் கொண்டிருக்கிறார். இந்த வகையில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பிரச்சினை ஒரு தனிமனித பிரச்சினை இது கருணாவின் தனி முடிவு. எமது தலைமையிடம் கலந்தாலோசிக்காது எடுக்கப்பட்ட முடிவு கருணாவின் இத்தகைய தனிப்பட்டமுடிவை மட்டு-அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் எவருமே ஏற்றுக்கொள்ளவில்லை.

(8ஆம் பக்கம் பார்க்க)



## நகல் ஏற்பு

(கொழும்பு)

இந்திய-சிறிலங்கா நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு உடன்படிக்கை குறித்து இந்தியாவினால் சிறிலங்காவிடம் சமர்ப்பிக்கப்பட்ட நகல்திட்டம் சிறிலங்காவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பதில் அனுப்பப்பட்டுள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## எரிக் சூல்கேய்ம் இலங்கைவருகிறார்

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சூல் கெய்ம் அடுத்தவாரம் கொழும்பிற்கு வருகைதரவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பிற்கு வரும் இவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்திக்கவுள்ளதோடு வன்னிக்கும் மட்டக்களப்பிற்கும் விஜயம்செய்யவுள்ளதாகவும் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றனர். (32)

# தனது சுயநல நோக்கத்திற்காக கருணா பிரதேச வாதத்தைப் பயன்படுத்தப் பார்கின்றார்!

## அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

குழப்பகரமான கருத்துக்களை முன்வைத்துவரும் கருணா, பிரதேச வாதத்தினைத் தனது சுயநல நோக்கத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளவிரும்புகின்றார் என நேற்று பத்திரிகையாளரைச் சந்தித்துப் பேசிய அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தா.

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு;

☐ வடக்குக்கும்-கிழக்கிடையில் மேற்கொளஎப்பட்டுவரும் அபிவிருத்தியில் பல்வேறுபட்ட வேறுபாடுகள் இருப்பதாக கருணா குற்றம் சாட்டுகின்றார். இது பற்றி?

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் எந்த விதமான அபிவிருத்திப்பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது தான் இந்த சமாதான முன்னெடுப்புக்களில் ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலைமை என்பது போராளிகளுக்குத் தெரியும், மக்களுக்கும் தெரியும். சர்வதேசத்திற்கும் தெரியும் இதுவே உண்மையான நிலைப்பாடு. அண்மையில் எமது தலைவரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக சர்வதேச நாடுகளுக்கு சென்று இந்த நிலைப்பாடு களைத்தான் நாம் முன்வைத்திருக்கின்றோம். ஆகவே, வட-கிழக்கில் எந்தவிதமான அபிவிருத்தி களோ அவசர மனிதாபிமானப் பணிகள் எதுவுமே மேற்கொள்ளப்படாத நிலை இருக்கின்ற போது இதனை கருணா ஒரு பிரச்சினையாக கிளப்பியுள்ளதை அனைவரும் புரிந்து கொள்வதற்கான ஒரு முன்னுதாரணமாக இருக்கும் என நான் கருதுகின்றேன்.

அத்தோடு, இறுதியாக கருணா தமிழ் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய பேட்டியின் போது தானே தனது வாயாலேயே வடக்குப் பகுதிகளில் எந்தவித அபிவிருத்திப்பணிகளும் மேற்கொள்ளப்படவில்லைஎன்பதை அவரே குறிப்பிட்டு விட்டு இப்பொழுது குழப்பமான கருத்தை முன்வைத்துக்கொண்டே இந்தப்பிரதேச வாதத்தை சுயநலனுக்காக பயன்படுத்திக் கொள்ள விரும்புகின்றார். அதை அனைவரும் புரிந்துகொள்வார்கள் என்றே நான் நினைக்கின்றேன்.

☐ இரு அரசியல் படுகொலைகள் கிழக்கில இடம் பெற்றிருக்கின்றன. இதுபற்றி என்ன கூறுகிறீர்கள்?

உண்மையிலேயே நாங்கள் இந்தத தேர்தலை தமிழர் தாயகப் பிரதேசத்தில் முழு அளவில் சனநாயக ரீதியில் எங்களின் மக்களின் வெளிப்பாடாக மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்துகின்ற தேர்தலாக இருக்க வேண்டும் என்பது தான் எமது தலைவரதும், தலைமைப்பீடத்தினதும், அனைவரது ஒட்டுமொத்த வெளிப்பாடாக இருக்கிறது. இந்த அடிப்படையில் தலைவரது கண்டிப்பான உத்தரவு சகல மாவட்டங்களுக்கும் வன்முறைகளைத் தூண்டக்கூடிய எல்லாசெயற்பாடுகளையுமே கட்டுப்படுத்தி போராளிகள், பொறுப்பாளர்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்பதாகும்

இந்நிலையில் அண்மையில் இடம் பெற்ற இத்தகைய கொலைகள் தொடர்பாக எமது தலைமைப்பீடம் மிகவும் அதிர்ச்சியடைந்திருக்கின்றது. சனநாயக வழியில் மக்கள் ஒன்றுதிரண்டு தமது அபிலாசைகளை வெளிப்படுத்துகின்ற இந்தக் காரியங்களை பலவீனப்படுத்தும் நோக்கோடு வேண்டுமென்றே இந்தச் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் எமது தலைமைப்பீடம் மிகுந்த கவலையடைந்திருக்கின்றது.

☐ கருணா அவர்கள் அமைதிப் பேச்சுவார்த்தையில் அங்கம் வகித்ததுடன் உங்கள் அமைப்பில் நீண்டகாலமாக பணியாற்றி ஒருதளபதியாக இருந்தார். இவ்வாறு இருக்கும் போது அவர் குறித்த முடிவை எடுத்ததன் பின்னணி என்ன?

எமது அமைப்பைப் பொறுத்தவரையில் தேசியத் தலைவரின் கீழ் ஒரு இலட்சியத்திற்காக அர்ப்பணித்து உழைப்பவர்களில் சிலர், அவ்வப்போது கொள்கையிலும், இலட்சியத்திலும் இருந்து தவறுவது இயல்பானது. அந்த அடிப்படையில் கருணா அவர்கள் ஒரு தனிமனிதனாக தனது சுயநலத்திற்காகத் தற்போது தமது கொள்கையில் இருந்து மாறியிருக்கின்றார் இதனை நாம் புதிய ஒரு விடயமாகப் பார்க்கவில்லை. எமது விடுதலை அமைப்பின் நீண்ட வரலாற்றுப் பணயத்தில் இவ்வாறான ஒரு சில சந்தர்ப்பங்களைச் சந்தித்திருக்கின்றோம். அந்த வகையில் கருணா அவர்களின் சுயநலம் வெளிப்பட்டு எமது போராட்டத்தில் இருந்து அகற்றப்படுவதையிட்டு நான் நிறைவடைகின்றேன்.

☐ நீங்கள் துரோகமான செயல் சுயநலம் என்றெல்லாம் குறிப்பிட்டீர்கள். அவை எவை என்று கூறமுடியுமா?

தற்பொழுது மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இருந்து எங்களின் தலைவரிடம் வந்திருக்கின்ற விசேட தளபதிகள், தளபதிகள், போராளிகள், பொறுப்பாளர்கள் கருணாவினுடைய முரண்பாடான துரோகத்தனம் கொண்ட செயற்பாடுகளை எமக்கு விபரித்த பொழுது எமக்கு அதிர்ச்சி என்பதைவிட எங்களுக்கு அவரது சுயநலப்போக்கை வெளிப்படுத்தி யுள்ளது எமது விடுதலை இயக்கம் ஒரு பொதுநல நோக்கோடு அர்ப்பணிப்போடு பல்லாயிரக் கணக்கான *போராளிகளின்* உயிர் அர்ப்பணிப்போடு கட்டியெழுப்பப் பட்டது. அப்படியான உறுதிமிக்க அர்பணிப்பு மிக்க பொது நோக்குக் கொண்ட அமைப்புக்குள் இப்படியான சுயநலவாதிகள் இருப்பது எம்மைப் பொறுத்தவரை அகற்றப்பட வேண்டியவர்கள். இதனை அவர்கள் எமக்கு கூறிய போது எமக்கு அதில் அதிர்ச்சியும் ஏற்படவில்லை. அதில் நாம் நம்பிக்கையும் நிறைவும் அடைந்திருக்கின்றோம். இதனால எமது மக்களின் எதிர்காலம் காப்பாற்றப் பட்டுள்ளது என்றுதான் நான் நினைக்கின்றேன்.

☐ கருணா அவர்கள் இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் கிழக்கு மாகாணம் தொடர்பாகத்தான் தனித்தரப்பாகப் பேச்சில் கலந்துகொள்ளவேண்டும் என்ற வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்? அத்தோடு இன்னுமொரு கேள்வி கருணா அவர்கள் தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில் அவர் கடவுள் எனக் கூறியிருக்கின்றார். ஆகவே அவர் கூறிய கடவுள் என்ற வார்த்தைக்கும் அவரது செயற்பாட்டிற்கும் எத்தகைய வேறுபாட்டை நீங்கள் காணுகின்றீர்கள்?

இதனைநான் தெளிவுபடுத்துவதைவிட நீங்களே தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். ''கடவுள்'' என்றால் அவரிடம் வந்திருக்கவேண்டும். நீங்கள் தமிழ் அலையில் வந்த செய்தியையும், பி.பி.சி. போன்ற சர்வதேச ஊடகங்களுக்கு அவர் வழங்கிய பேட்டிகளையும் பார்த்தால் அவர் கடவுளை நம்புவாரா என்பதை நீங்களே விளங்கிக்கொள்ளலாம்.

எங்களது தலைவர் ஒருகாலமும் தன்னைக்கடவுளாக நேசிப்பதை விரும்பவில்லை. இலட்சியத்தையும், கொள்கைகளையும், மக்களையும், தேசத்தையும் நேசிப்பவர்களைத்தான் எமது தலைவர், எப்பொழுதும் நேசிப்பவர். அந்த வகையில் அவரின் தனிப்பட்ட கடவுள், விசுவாசத்தை உங்களால் விளங்கிக் கொள்ள முடியும் என நான் நினைக்கின்றேன்.

☐ உங்களது இயக்கத்தில் கட்டுக்கோப்பும் கண்டிப்புமாக இருந்த இந்த நிலை யிலே நீங்கள் சிங்களத் தலைமையிலேயே கட்டமைப்பில்லை சீர்குலைந்திருக்கின்றது. ஒற்றுமை யில்லை என்றெல்லாம் விமர்சனம் செய்யும் இந்த நிலையிலே இந்தசம்பவம் தாயகத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்து என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?

இந்தப்பிரச்சினை ஒரு தனிநபர் பிரச்சினை என்பதை நீங்கள் செய்தியாளர் மாநாட்டைக்கொண்டு இந்த கட்டமைப்பினைப் புரிந்துகொள்ளலாம். ஏனெனில் அவர் ஒரு தனிநபர்விட்ட இந்தத் தவறு காரணமாகவும் அவர் எமது அமைப்பின் கொள்கையிலும், இலட்சியத்திலும் இருந்து தவறிய காரணத்தினாலோ அங்கே இருந்த எமது விசேட தளபதிகள், தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் அனைவரும் எமது தலைமைப்பீடத்திடம் வந்து நிலையை விளக்கிஒழுங்கு நடவடிக்கையை எடுக்கும் படி கூறியுள்ளனர். இதனை வைத்துக்கொண்டே நீங்கள் எங்களது அமைப்பின் கட்டுக்கோப்பையும் ஒழுங்கையும் தெளிவாக விளங்கிக்கொள்ளலாம்.

☐ தற்பொழுது ஏற்பட்டுள்ள இந்த மந்த நிலை காரணமாக சமாதானப் பேச்சுக்களில் சமாதானப் பேச்சுகளில் ஏதாவது மந்தநிலை ஏற்படுமா? முன்னைய பேச்சுக்களில் கலந்துகொண்ட கருணாவுக்கு பதிலாக வேறு யாராவது நியமிக்கப்படுவார்களா?

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கோ அல்லது இந்த சமாதான சூழலுக்கோ எந்தவித சம்பந்தமும் தற்போது உருவாகியுள்ள நிலையால் ஏற்படவில்லை. எமது தலைமைப்பீடமும் எமது கட்டமைப்புக்களும், மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கின்றது. இந்த சமாதான நடவடிக்கையை உறுதியாக முன்னெடுத்துச் செநல்வதற்கான அர்ப்பணிப்புடனும் உதிப்பாட்டுடனும் எங்களது தலைமைப்பீடம் இருக்கின்து. எனவே இது ஒரு தனிமனிதரால் ஏற்படுத்தப்பட்டதாக மாத்திரமே நீங்கள் பார்க்கலாமே தவிர எங்களது போராட்ட முன்னெடுப்புக்கோ சமாதான முன்னெடுப்புக்கோ எந்தவிதமான ஒரு சிறு குழப்பத்தைக் கூட இது கொண்டுவரப்போவதில்லை. ஏனெனில் எமது தலைமைப்பீடம் தெளிவா கவும் உறுதியாகவும் இருக்கின்றது. எமது தலைமைப்பீடத்தால் நியமிக்கப் பட்ட எமது மட்டு-அம்பாறை மாவட்டப் போராளிகள், பொறுப்பாளர்கள் மிகவும் உறுதியாக இருக்கின்றனர். ஆகவே இதனைப் பற்றி நீங்கள் சந்தேகிக்க வேண்டிய தேவை இல்லை.

அடுத்ததாக அடுத்த கட்டப்பேச்சுகளின் போது எமது பிரதிநிதிகளைத் தீர்மானிப்பது எங்களது தலைமைப்பீடம் தான். ஆகவே தலைமைப்பீடம் ஒரு மாற்றீடான பிரதிநிதிகளை யார் யார் என்று எதிர்காலத்தில் தீர்மானிக்கும் அந்த வேளையில் நாம் அதுதொடர்பான செய்திகளை உங்களுக்குத் தருவோம்.

☐ கருணா அவர்கள் தான்செய்தது தவறுஎன்று உணர்ந்து தான் கடவுள் என்று கூறிய உங்களது தலைவரிடம் மீண்டும் மன்னிப்புக்கோரி வந்தால் நீங்கள் அதை ஏற்றுக்கொள்வீர்களா?

என்னைப்பொறுத்தவரை எங்களது விடுதலைப்போராட்ட அனுபவத்தில் எங்களது தலைவரை அனைவரும் தெளிவாக புரிந்திருக்கிறார்கள் எங்களது தலைவர் எவரையும் மன்னிப்பு வழங்கி மறுவாழ்வு கொடுப்பதற்கு எப்பொழுதும் தயாரானவர். எனவே கருணா அவர்கள் தன்னுடைய தவறை உணர்ந்து திருந்தி வருகின்றபோது அவரின் வாழ்க்கைக்கான உத்தரவாதத் தைக்கொடுத்து அவருக்கான எதிர்காலத் தைக் கொடுப்பதற்கு தலைவர் நிச்சய மாக தயாராக இருப்பார் என்பதில் நாம் மிகவும் உறுதியாகவும், தெளிவாகவும் இருக்கின்றோம்.

☐ கருணாவை நீங்கள் தனிமனிதன் என்று கூறுகிறீர்கள். ஆனால் படங்களில் அவரைச்சுற்றி ஆண், பெண் போராளிகள் என பெருமளவானோர் நிற்கிறார்கள். இந்தநிலையில் அவரை எவ்வாறு தனிமனிதரென்று கூறுவது?

நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். இன்றுதான் எங்களது தலைமைப்பீடத்தில் முடிவுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை கருணா அவர்கள் அங்குள்ள போராளிகளுக்கு எமது தலைவரது தீர்மானங்கள் தலைமைப்பீடத்தினுடைய தீர்மானங்கள் எதையும் சரியான முறையில் அறியப்படுத்தாது தவறான முறையில் ஒரு சில போராளிகளுக்கு பிழையான கருத்துக்களைக் கூறிவைத்திருக்கலாம். ஆனால், இன்று எங்களுடைய விசேட தளபதி, தளபதிகள், பொறுப்பாளர்கள், இங்கே எமது தலைமைப்பீடத்தினதும் கருத்துக்களைப் பகிரங்கமாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே இந்தச் செய்திகள்அவர்களுக்கு நிச்சயமாகப் போகும். ஏனெனில் அங்கே அந்தப் போராளிகள் கூறிவிட்ட விடயங்களைக் கதைப்பதற்குதான் அனைத்துப் போராளிகளும், பொறுப்பாளர்களும் இங்கே வந்தார்கள். கருணா தனிமனிதன் இல்லாது அவர் ஒரு பெரும் சக்தி என்று இருந்திருக்குமேயானால் இந்தத் தளபதிகளும், பொறுப்பாளர்களும் இன்று இங்கே தலைவரிடம் வந்திருக்கமாட்டார்கள். ஆகவே அவர்களுக்கு, சரியான செய்திகளைக் கொண்டு செல்ல இருக்கிறார்கள். கொண்டு சென்றவுடன் நீங்கள் நிலைமைகளை நேரில் பார்ப்பீர்கள்.

☐ மட்டக்களப்பில் இருந்து திருகோணமலைக்கு படைகளை நகர்த்தி வருகிறீர்கள் என்று கூறப்படுகிறது?

எம்மைப் பொறுத்தவரை அப்படியான நகர்வுகள் தேவையற்றது ஏனெனில் மட்டக்களப்பாக இருக்கலாம், அம்பாறை, திருகோணமலையாக இருக்கலாம் எல்லா இடங்களிலும் எங்களின் தேசியத்தலைவரதும் எங்களது விடுதலை இயக்கத்தினுடைய படைகளும் தான் நிற்கிறது. அவர்கள் எங்கேயும் நகர்ந்து செல்ல வேண்டிய தேவை இல்லை. அங்கே அவர்கள் முழுமையான அர்ப்பணிப்போடும் கொள்கைப்பற்றுடனும், விசுவாசத்துடனும் இருக்கிறார்கள் ஆகவே இதுவரை அப்படியான குழப்பமான நிலைமை ஏற்படவுமில்லை ஏற்படப்போவதுமில்லை.

☐ மட்டக்களப்பில் உருவாகியுள்ள நிலையால் கரிகாலனும் நீக்கப்பட்டு விட்டாரா? அப்படியானால் அவர் எங்கே இருக்கிறார்?

கருணா என்கின்ற தனி மனிதன் மாத்திரம் தான் நீக்கப்பட்டுள்ளார். அதனையே எமது தலைமைப்பீடத்தின் செய்தியில் வாசித்துக்காட்டினேன். தனிமனிதன் கருணா மட்டும் தான் இன்று எங்களுடைய கொள்கைக்கும், இலட்சியத்துக்கும், தலைமைக்கும் எதிராக செயற்படுகின்ற தனிமனிதனாக இருக்கிறார் என்பதைத் தெளிவாகக் கூறிவைக்க விரும்புகிறேன்.

தற்போது எங்களது அறிவுறுத்தலுக்கும் தலைமைப்பீடத்தின் கட்டுப்பாட்டுக்கும் அமையவே கரிகாலன் உட்பட அங்குள்ள ஏனைய பொறுப்பாளர்களும், போராளிகளும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இங்கு எல்லாவற்றையும் நிர்வகித்த கட்டுப்படுத்திய அனைத்துத் தளபதிகளும், பொறுப்பாளர்களும் எங்களுடைய தலைமைப்பீடத்தைச் சந்தித்து முடிவெடுத்துச் செல்வதற்காக வந்திருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய கட்டுப்பாட்டுக்குள் அனைவரும் செயற்படுவார்கள் என்பதுதான் எதிர்காலத்தில் நடைபெறும்.

☐ உங்களது இயக்கத்துக்கு நிர்வாகக் கட்டமைப்புமிக்க பலம் வாய்ந்த புலனாய்வுத்துறை ஒன்று உள்ளது. இப்படியாக ஒன்று நடக்கப்போகிறது என்பத எப்படி உங்களால் அவதானிக்க முடியாமல் போனது?

தற்பொழுது சமாதான காலம் பத்திரிகைகள், ஊடகங்கள் கொஞ்சம் நெருக்கமாக செயற்படக்கூடிய சூழலில் இதனை நீங்கள் சற்று நெருக்கமாகப் பார்க்கிறீர்கள். எங்களது நீண்ட விடுதலைப் போராட்ட வரலாற்றில் பல சம்பவங்கள் நடந்திருக்கிறது. அமைப்பிலே கொள்கை ரீதியாக உறுதியாக இல்லாத போராளிகள், பொறுப்பாளர்கள் பல தடவை விலகியிருக்கிறார்கள். நீக்கப் பட்டிருக்கின்றார்கள் இது எங்களுடைய அமைப்பிலே உள்ள உரிமை. அந்த அடிப்படையில் கருணா என்பவர் ஒரு மனிதனாக இருந்தாலும் அவர் அண்மைக் காலத்தில் பேச்சுவார்த்தைகள சமாதான முயற்சிகளில் போன்றவற்றில் அவர் பொறுப்புநின்று வெளிப்படையாகவும் பகிரங்கமாகவும் தெரிந்தவகையில் அதைநீங்கள் ஒருபாரிய பிரச்சினையாகப் பார்க்கிறீர்கள். எங்களைப் பொறுத்தவரையில் இதை நாங்கள் வழமையான ஒழுங்கு நடவடிக்கையாக நிர்வாக ஒழுங்காகத்தான் எமது போராளிகள், பொறுப்பாளர்கள், தளபதிகள் எல்லோருமே பார்க்கின்றோம். ஆகவே கவனிக்கத் தவறியது என்பதுதவறு. தனிமனிதனுடைய தவறுகள் இப்போது தெரிந்திருக்கிறது. அதற்கான ஒழுங்குநடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். ஆகவே முன்கூட்டியே அவா

(8ஆம் பக்கபம் பார்க்க)


# சாவு அறிவித்தல்

## கதிரேசு—சிவயோகமலர்

கிளிநொச்சி பரவிப்பாஞ்சானை பிறப்பிடமாகவும் அமுதசுரபி வில்சன் வீதி இரணைமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு சிவயோகமலர் 06.03.2004 சனிக்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற நடேசு செல்லம்மா தம்பதியினரின் மகளும் பொன்னையா கதிரேசு (காந்தி அண்ணன்) அவர்களின் பாசமிகு மனைவியும், கண்ணதாசன் கிருஸ்ணவனஜா ஆசிரியை திருவையாறு மகாவித்தியாலயம், கிருஸ்ணகுமார் பிரான்ஸ், கதிர்காமநாதன் கிருஸ்ணலதா நடன ஆசிரியை லண்டன், கஜேந்திரகுமார் லண்டன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், க.கண்ணதாசன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பலாலி, தி.கதிர்காமநாதன் பிரான்ஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், அச்சயாவின் அன்பு பேத்தியுமாவார். இவரது ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்கப்படுகின்றார்கள்.

தகவல்,
கணவன்,
பொ.கதிரேசு,
பிள்ளைகள், மருமக்கள்

(3540)

# ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்கள் குழுவை ஈராக் அனுப்ப பாதுகாப்புச் சபை வலியுறுத்து

## அமெரிக்கா, ஸ்பெயின் எதிர்ப்பு

**ஈராக்கில் பேரழிவு தரும் ஆயுதங்கள் இருக்கின்றனவா என்பது குறித்து ஐக்கிய நாடுகளின் ஆயுதப் பரிசோதகர்கள் அங்கு உடனடியாக அனுப்பிவைக்கப்படவேண்டிய காலம் தோன்றியுள்ளதென ஐ.நா.வின் பாதுகாப்புப் பேரவை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.**

இதேவேளை ஐ.நா.வின் பாதுகாப்புப் பேரவையினரின் இந்தக் கூற்றிற்கு பதிலளித்த அமெரிக்காவும் ஸ்பெயினும் இது அதற்கு உரியதருணம் அல்ல எனத் தெரிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவைக் கூட்டம் மூடிய கதவுகளுக்குள் நேற்று முன்தினம் நடைபெற்ற போதே ஆயுதப் பரிசோதகர்கள் ஈராக்கிற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டது.

ஈராக்கில் உண்மையிலேயே பேரழிவுதரும் ஆயுதங்கள் இருக்கின்றனவா என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் தோன்றி உள்ளதாக ரஷ்யத்தூதுவர் சேறிலிவ்றோ கூறியுள்ளார்.

சில பிரதிநிதிகள் இதற்கு மறுப்புத் தெரிவித்துள்ள போதிலும் பெரும்பாலானவர்கள் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

ஈராக்கிற்குள் அமெரிக்கப் படைகள் ஊடுருவுவதற்கு முன்னர் அங்கு ஆயுதப் பரிசோதனைகளை நடத்திய ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் அங்கு இருந்து வாபஸ் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜினீவில் சந்திப்பு

வடகொரிய அணுவாயுதப் பிரச்சினைக்குத்தீர்வுகாணும் ஆறு தரப்பினர் பங்கேற்கும் மூன்றாம் கட்டப் பேச்சுக்கள் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ளது 2ம் கட்டப் பேச்சுக்கள் இணக்கமின்றி முடிவடைந்தமை தெரிந்ததே.



பாக்தாத்தில் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் வெள்ளிக்கிழமை தொழுகையில் ஈடுபடும் ஷியா முஸ்லிம்கள். கடந்த வாரம் இடம்பெற்ற தாக்குதலில் 181 ஷியா முஸ்லிம்கள் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

# தொழில்நுட்ப சூத்திரங்களை விற்ற அமெரிக்கப் பிரஜைக்கு சிறை!

(வாஷிங்டன்)

தாய்வானுக்கு உளவு பார்த்ததாக சீனாவினால் முன்னர் குற்றவாளியாகக்காணப்பட்ட அமெரிக்கப் பிரஜை ஒருவர் சீனாவிற்கு தொழில்நுட்பச் சூத்திரங்களை சட்டவிரோதமாக விற்பனை செய்தமைக்காக அமெரிக்காவினால் குற்றவாளியாகக் காணப்பட்டு சிறைத்தண்டனைக்கு உள்ளாகியுள்ளார்.

அமெரிக்காவில் வாழ்ந்துவந்த சீன சமூகவியலாளரான காவோ சான் என்ற இந்தநபருக்கு அலெக்சாண்பிரிய நீதிபதி சிறைத் தண்டனையோடு எட்டுமாதங்கள் சமூக சேவை செய்யுமாறும் இரண்டாயிரத்து ஐநூறு டொலர் அபராதம் செலுத்துமாறும் உத்தரவிட்டிருக்கிறார்.



ஈராக்கின் பஸ்ராவில் பிரிட்டிஷ் படையினருடன் கண்காணிப்பில் ஈடுபடும் ஈராக்கிய பொலிசார் ஒருவர்

# ஈராக்கின் இடைக்கால அரசியல் யாப்பு இறுதி நேரத்தில் கைச்சாத்திடுவது நிறுத்தம்!

## அமெரிக்க கொள்கையில் மாற்றமில்லை

அமெரிக்க நிர்வாகம் தயாரித்த ஈராக்கிற்கான இடைக்கால அரசியல் யாப்பு நேற்றுமுன்தினம் இறுதிநேரத்தில் கைச்சாத்திடுவது பிற்போடப்பட்டுள்ளது.

ஈராக்கின் பெரும்பான்மை ஷியா இனத்தைச் சேர்ந்த ஐந்து தலைவர்கள் இறுதிநேரத்தில் தெரிவித்த ஆட்சேபனையை அடுத்து நேற்று முன்தினம் கைச்சாத்திடும் வைபவம் பிற்போடப்பட்டது.

இந்த ஐந்து அதிருப்தியாளர்களும் ஈராக்கின் அதிசங்கைக்குரிய அயத்தொல்லா அலி அல் சிங்காணியின் ஆலோசனையைப் பின்பற்றி இறைமை உள்ள ஈராக்கில் ஷியா இனத்தவர்களுக்கு கூடுதல் ஆதிக்கத்தைக் கோரி வருகிறார்கள் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவி துள்ளன.

இந்த நிலைப்பாடானது ஈராக்கின் நிர்வாகத்தில் தங்களுக்கும் பங்கு கோரும் ஏனைய முஸ்லிம் இனத்தவர்களோடு மோதலை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

இதேவேளை ஈராக்கின் இடைககால நிர்வாகம் தொடர்பான இடைக கால அரசியல் யாப்பு கைச்சாத்திடமுடியாமல் போனதை பெரிதுபடுத்துவதாக வெள்ளை மாளிகை ஈராக்கியர்களிடம் இறைமையைக் கையளிப்பது வரும் யூன் மாதம் முப்பதாம் திகதி இடம்பெறும் என்று தெரிவித்துள்ளது.

# பலஸ்தீனத்துடனான எல்லைகளை இஸ்ரேல் நேற்றுமுதல் மூடியது

## தாக்குதல்கள் நடைபெறுமென அச்சம்

(டெல்அவிவ்)

இஸ்ரேல்-பலஸ்தீனத்துடனான தனது நாட்டின் எல்லைகள் சகலவற்றையும் மூடி உள்ளது.

கமாஸ் இயக்கத்தின் மூன்று உறுப்பினர்களை இஸ்ரேல் கொன்றதற்குப் பதில் நடவடிக்கையை கமாஸ் இயக்கம் மேற்கொள்ளும் என்பதற்காகவே இஸ்ரேல் பலஸ்தீனத்துடனான தனது நாட்டின் சகல எல்லைகளையும் மூடியதற்குக்காரணம் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்த எல்லைகள் எதிர்வரும் திங்கட்கிழமை வரை மூடப்பட்டிருக்குமெனவும் இஸ்ரேல் அறிவித்துள்ளது.

# இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் விஜயம்

## பேச்சுக்களை முன்னெடுப்பதே நோக்கம்

அமெரிக்காவின் வெளிநாட்டமைச்சர் கொலின்பவல் இந்திய மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ள இருப்பதாக இராஜாங்கத் திணைகளம் தெரிவித்துள்ளது.

இவரது விஜயத்தின் நோக்கம் இந்தியாவினதும் பாகிஸ்தானினதும் பேச்சுவார்த்தைக்கு உதவுவது, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் பற்றியும் ஆயுதப் பரவலைத் தடுப்பது பற்றியும் இரு நாடுகளுடனும் பேச்சுவார்த்தைகளையும் நடத்துவதுமே எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அமெரிக்காமீது பாரிய தாக்குதலை நடத்திய ஒசாமா பின்லேடனை கண்டு பிடிப்பதற்காக பெண்டகன் இராணுவநடவடிகைகயை நடத்தவிருக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இவர் விஜயம் செய்யவுள்ளார்.

அமெரிக்காவில் இரண்டாயிரத்து ஓராம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பதினோராம் திகதி இடம்பெற்ற தாக்குதலின் சூத்திரதாரி என்று குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒசாமா பின்லேடன் ஆப்கானிஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான எல்லைப் பிரதேசத்தில் மறைந்திருப்பதாக நம்பப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கூட்டுப் பொருளாதாரத் திட்டங்களுக்கு வட,தென்கொரியாக்கள் இணக்கம்

வடகொரியாவும், தென்கொரியாவும் சில பொருளாதார விடயங்களுக்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

நான்கு நாட்கள் நடைபெற்ற கூட்டுப் பொருளாதாரத் திட்டங்கள் பற்றிய பேச்சுவார்த்தையின் போது இவ் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் தென்கொரிய நிறுவனங்கள் உற்பத்திகளை ஆரம்பிப்பதற்கு இணங்கியுள்ளன.

அத்துடன் இரண்டு நாடுகளுக்குமிடையே கைத்தொழில் வளங்களை திறந்து தென்கொரிய நிறுவனங்கள் இணங்க அனுமதிக்கவும், அவற்றுள் வடகொரிய தொழிலாளர்கள் பணியாற்றுவார்கள் எனவும் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை நெடுஞ்சாலைகளை முழுமையாகத் திறப்பது சம்பந்தமாக கருத்து வேறுபாடுகள் இடம் பெற்றுள்ளன.



V838 மொனோ செற்ரோறிஸ் என்ற நட்சத்திரக் கூட்டத்தை நாஸா கப்பீள் தொலைக் காட்சி ஊடாக எடுத்த படம்

# இந்தியத் துணைப் பிரதமரின் ரதயாத்திரையை சென்னை உயர்நீதிமன்றம் தடைசெய்ய மறுப்பு

## -வன்முறைகளுக்கு வித்திடலாமென அச்சம்

(புதுடில்லி)

இந்தியாவின் துணைப்பிரதமர் எல்.கே. அத்வானி நடக்கவிருக்கும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலை ஒட்டி நாடுதழுவிய ஏகயாத்திரைக்கு தடைவிதிக்கும்படி சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிபதிகள் தள்ளுபடி செய்துள்ளனர்.

வரவிருக்கும் பாராளுமன்ற மக்களவைத் தேர்தலுக்குப் பிரச்சாரம் செய்யும் முகமாகவே பி.ஜே.பி. மூத்த தலைவர்களில் ஒருவரும் இந்தியத்துணைப்பிரதமருமான எல்.கே. அத்வானி இம்மாதம் 10 ஆம் திகதி தமிழகத்தின் தென்முனையான கன்யாக்குமரியில் தொடங்கி இந்தியா முழுவதும் ரதயாத்திரை மேற்கொள்வதென திட்டமிட்டிருக்கிறார்.

இவரின் இந்தத் திட்டமானது நாட்டின் அமைதியைக் குலைக்குமென்றும் மதக்கலவரங்களுக்கு வழிவகுக்குமென்றும் ஆகவே இதனைத் தடைசெய்யவேண்டும் என்றும் வழக்கறிஞர் ஒருவர் வியாழக்கிழமை சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுச்செய்திருந்தார்.


எல்.கே. அத்வானி 1992 ஆம் ஆண்டு இதேபோன்று மேற்கொண்ட ரதயாத்திரை அயோத்தியில் இந்துத் தீவிரவாதிகளால் பாபர் மசூதி இடிக்கப்படவும் அவர் செல்லும் பகுதியிலும் மதக்கலவரங்கள் ஏற்படவும் அதன் பின்னர் பம்பாய்க்குண்டு வெடிப்பிற்கும் காரணமாகி விட்டது என்றும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதேவேளை கோவைக்குண்டு வெடிப்புக்களை தவிர தமிழ்நாடு மற்றமாநிலங்களை விட அமைதியான மாநிலமாகத் திகழ்கிறது என்றும் அதை இந்த ரதயாத்திரை குலைத்துவிடக்கூடும் என்றும் அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

ஆனால் இந்த விடயத்தில் நீதிமன்றம் ஈடுபடமுடியாது எனக் கூறி அந்த மனுவைத்தள்ளுபடி செய்து விட்டது.

# வியட்னாமை விஞ்சும் ஈராக்...?

ஈராக்கில் என்னதான் நடக்கின்றது? ஈராக்கில் தொடரும் தாக்குதல்களுக்கும உயிரிழப்புகளுக்கும் சூத்திரதாரி யார்? சதாம்ஹுசைன் என்று இதுவரை நம்பப் பட்ட போதும் கைதான பின்னரும் தொடரும் அவலங்களுக்குப் பொறுப்பு யார்? இவை தான் இன்று உலகை ஈர்க்கும் ஈராக்கிய விடயங்கள்.



புஷ்

ஈராக்கில் நாளுக்குநாள் தாக்குதல்களின் உக்கிரம் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. ஈராக்போர் முடிந்துவிட்டது என்று அமெரிக்கா வார்த்தையளவில் மட்டுமே கூறிக்கொண்டிருக்கிறது. ஆனால் நிலைமை படுமோசமாகவே நாளுக்குநாள் மாறிக்கொண்டிருக்கிறது.

ஈராக் அமெரிக்காவுக்கு மற்றொரு வியட்னாமாக மாறிவருகின்றது என்றால் கூட மிகையில்லை. வியட்னாமை விட மோசமாகவே ஈராக் விடயம் காணப்படுகின்றது.

'ஈராக் போர் முடிந்துவிட்டது' என்று புஷ் அறிவித்த காலத்திலிருந்து இன்று வரை ஒன்று, இரண்டு, பத்து... என அமெரிக்க வீரர்கள் பலியாகி வருகின்றார்கள்.

அந்த வகையில் பலியான அமெரிக்கப்படையினர்களின் எண்ணிக்கை 500 ஐத் தாண்டிவிட்டது என்பது கணிப்பீட்டுத் தகவல். இதில் தற்கொலை செய்து கொண்ட படையினர் உள்ளடக்கப்படவில்லை.

எத்தனை பேர் மனஉளைச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்? தற்கொலை செய்துகொண்டவர்கள் எத்தனை பேர்? எனும் விபரத்தை அமெரிக்க இராணுவத் தலைமையகம் வெளியிட மறுக்கின்றது. மறுக்கின்றது என்பதை விட தயக்கம் காட்டுகின்றது என்பதே உண்மை.

இதேவேளை 300ற்கும் அதிகமான இராணுவத்தினர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். 538 இராணுவத்தினர் அமெரிக்காவுக்கு உளவியல் சிகிச்சைக்காக அனுப்பப்பட்டுள்ளார்கள் என்பது வேறு தகவல்கள்.

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடவுள்ள ஜோர்ஜ் புஷ் ஈராக் விவகாரத்தால் ஆடித்தான் போயுள்ளார். தேர்தல் தொடர்பான பிரச்சாரத்தில் முழுத் திருப்தியுடன் ஈடுபடமுடியாமல் அவரை வாட்டுவதும் ஈராக்தான்.

இதேநேரம் அமெரிக்க சனாதிபதித் தேர்தலில் ஜோர்ஜ் புஷ்ஷிற்கு எதிராகப் போட்டியிடவுள்ளார் செனட்டரான ஜோன் ஹெரி.

இவர் தனது பிரச்சாரத்தில் ஈராக் போரை கைவசம் தூக்கியுள்ளார் என்று கூறப்படுகின்றது. அத்துடன் வியட்னாம் யுத்தகாலத்தில் ஜோர்ஜ்புஷ் என்ன செய்தார் எனும் கேள்வியையும் எழுப்பியுள்ளார்.

இதனை சனநாயகக் கட்சியினர் அப்படியே பின்பற்றுகின்றனர். இதனால் வியட்னாம் போரில் ஜோர்ஜ்புஷ் என்ன பங்கு வகித்தார் எனும் சர்ச்சை எழுந்துள்ளது.

அதுமட்டுமன்றி தற்போதைய ஜோர்ஜ் புஷ் நிர்வாகத்தைச் சேர்ந்த எவருமே வியட்னாம் யுத்தத்தில் பங்கு கொள்ளவில்லை என்றும் சனநாயகக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இதனையடுத்தே வியட்னாம் யுத்தம் சனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தில் முக்கிய கருப்பொருளாக அதாவது, ஈராக் போலவே மாறியுள்ளது என்றே நம்பத் தோன்றுகின்றது.

குடியரசு கட்சியானது தமக்குக் கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தம து கட்சி தேசப்பற்றுமிக்க கட்சியாகவே காட்டிக்கொண்டிருந்தது. தமது கொள்கைகளை எதிர்ப்பவர்களை தேசப்பற்று இல்லாதவர்கள் என்றே முத்திரை பதித்தது. இதனால் தான் சனநா யகக் கட்சியை பலமு றை வீழ்த்துவதற்கு ஆயுதமாக அதனைப் பயன்படுத்தியது.

ஆனால் இம்முறை சனநாயகக் கட்சி வியட்னாம் போர், ஈராக்யுத்தம் என்பவற்றை தமக்கு சாதகமாக்கிக்கொண்டுள்ளது.

அதுமட்டுமன்றி அமெரிக்கர் என்ற வகையில் ஜோர்ஜ்புஷ் வியட்னாம் யுத்த காலத்தில் தமது பணிகளை ஒழுங்காக, முழுமையாக, சரியாகச் செய்யவில்லை என்பதை வெளிப்படுத்த மேலும் மேலும் ஆதாரங்களைத் தேடி வருகின்றது.

இதேவேளை ஜோர்ஜ்புஷ்ஷின் புகழ் உச்சியில் இருந்தபோது அடங்கி மறைந்து போயிருந்த சிக்கல்கள், வில்லங்கங்கள் எல்லாம் இப்போது மீண்டும் வெளிவரத் தொடங்கியுள்ளன.

புஷ்ஷின் போதாத காலம் அவரது செல்வாக்கு அழியும் போதே பழைய பிரச்சினைகளையெல்லாம் இப்போது அவருக்கு முன்னே எழுந்து அவருக்கு சங்கடத்தை நெருக்கடியை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது.

அந்த வகையில் தான் ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருக்கின்றது எனும் அமெரிக்க புலனாய்வுத் தகவலை ஜோர்ஜ் புஷ் நிர்வாகம் பெரிதாக நீட்டி முழக்கி போர் தொடுத்தது என்று மற்றொரு கணிப்பீடு.

இதேபோல் முன்னாள் அமெரிக்க சனாதிபதி ரீகனும் துணை சனாதிபதியான ஜோர்ஜ்புஷ்சும் இணைந்தே பேரழிவை ஏற்படுத்தக்கூடிய உயிரியல் இரசாயன ஆயுதங்களை ஈராக்கிற்கு அளித்தனர்; ஈராக்கிற்கும் வாஷிங்டனுக்கும் இடையில் உறவுகளைப் பலப்படுத்த ரீகனின் பிரதிநிதியாக அன்று பாக்தாத் சென்றவர் இன்றைய பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட்;

1983 இல் பென்டகனை சேர்ந்த 60 விசேட நிபுணர்கள் ஈரானின் இராணுவம் குறித்த தகவல்களையும் அதனை எதிர்கொண்டு வெற்றி பெறும் வழிவகைகளையும் ஈராக்கிற்கு அளித்தனர்;

1984 இல் அமெரிக்க உளவுத்துறை ஈராக்கிற்கு இரகசியமாக புலனாய்வுத் தகவல்களை வழங்கியது. இந்தத் தகவல்களே ஈரானிய படைவீரர்கள் மீது மஸ்டார்ட்வாயு தாக்குதல் நடத்த காரணம்; 1985 இல் பாரியளவில் உயிரியல் இரசாயனப்பொருட்கள் ஈராக்கிற்கு அனுப்பப்பட்டன; போன்ற தகவல்களை அமெரிக்க வர்த்தக நிலையத்தின் அறிக்கையை ஆதாரமாகக் காட்டப்பட்டுள்ளது.



ஜோன் ஹெரி

இதனை பிரான்ஸ் நாட்டின் வழக்கறிஞர் ஜக்குஸ் வேர்ஜேஸ் (JACGUES VERGES) கூறியுள்ளார். அத்துடன் நியூயோர்க் ரைம்ஸ் ஒரு- வருடத்திற்கு முன்னர் பிரசுரித்த செய்தி இது என்றும் கூறப்ப டுகின்றது.

அதுமட்டுமன்றி 1983 இல் 402 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஈராக்கிற்கு விவசாயக் கடன் என்றும் 1984இல் இத்தொகை 503 மில்லியனாக அதிகரித்து 1988 இல் 1.1 மில்லியனாக உயர்வடைந்துள்ளது. ஈராக்கில் எண்ணெய் குழாயொன்றை நிர்மாணிப்பதற்கு 500 மில் அமெரிக்க டொலர்களும் வழங்கப்பட்டன.

அப்போது துணை சனாதிபதியாக இருந்த ஜோர்ஜ் புஷ் இந்த விடயத்தில் தனிப்பட்ட கவனம் எடுத்துக் கொண்டு உதவியுள்ளார். சதாம்ஹுசைன் விரும்பிய அனைத்தும் கிடைப்பதை அமெரிக்கா அப்போது உறுதி செய்தது.

இத்தகைய திடுக்கிடும் தகவல்களை, ஈராக்கிற்கான ஏற்றுமதி குறித்து விசாரணை செய்த அமெரிக்க சனப் பிரதிநிதிகள் சபை உறுப்பினர் சாமுவெல் கூறியுள்ளார்.

ஜோர்ஜ் புஷ் சனாதிபதியாக பதவியேற்றவுடன் செய்த முதல் காரியம் சதாம் ஹுசைனின் மனித உரிமை மீறல்கள் குறித்த ஆவணங்களை அழித்தது; மேலும் குர்திஸ் இன மக்கள் படுகொலை செய்ததைப் பற்றி வாய்திறந்தே பேசாதது.

இவ்வாறு அமெரிக்க மக்களுக்கு தெரியாமல் அமெரிக்கா மிகவும் இரகசியமாக வகுத்த வெளிவிவகார கொள்கையினால் தான் இன்று அமெரிக்கா திண்டாடுகின்றது. என வில்லேஜ் வொய்ஸ் தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அன்று அமெரிக்கா வழங்கிய பேரழிவு ஆயுதங்களே பின்னர் இன்று அமெரிக்கப் படையினருக்கு ஆபத்தாக மாறிவிட்டது. அதாவது "தன்கைவிரலே தன் கண்ணைக் குத்திய கதை"யாகி விட்டது.

இவ்வாறு முடிந்த அத்தியாயங்கள் என்று ஜோர்ஜ்புஷ் அழித்த, மறக்க முயன்ற அத்தனை விடயங்களும் இன்று பெரும் தலைவலியை புஷ்ஷிற்கு ஏற்படுத்தி நிற்கின்றன.

இத்தகைய சர்ச்சைகளை ஜனநாயகக் கட்சியும் அதன் சனாதிபதி வேட்பாளர் ஜோன் ஹெறியும் தமக்கு சாதகமாக்கிக் கொண்டு பிரச்சாரம் செய்வதும் புஷ்ஷின் அடுத்த பெரும் நெருக்கடியை உண்டு பண்ணியுள்ளது.

இவ்வாறான இக்கட்டான நிலைகளினால் ஜோர்ஜ் புஷ்ஷின் நிலை பலவீனப்பட்டுக் கொண்டு செல்கின்றது. இதனை கருத்துக் கணிப்பு ஒன்று வெளிக்கொணர்ந்துள்ளது.

ஜோர்ஜ் புஷ்ஷை இன்னும் ஆதரிப்பவர்கள் 42 வீதமாக குறைவடைந்துள்ளனர். அதேநேரம் ஜோன் ஹெறியை 47 வீதமானவர்கள் ஆதரிக்கின்றார்கள். அது வும் 42 வீதமானவர்களும் பயங்கரவாதத் திற்கு எதிரான போர் என்பதை ஆதரிப்பவர்கள்.

அதேநேரம், புஷ் நிர்வாகத்தின் கீழ் அமெரிக்கா பொருளாதாரம் முதல் வேலை வாய்ப்பு வரை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், ஈராக்கினால் அமெரிக்காவுக்கு உடனடி அச்சுறுத்தல் எதுவுமே இல்லாத போதே போர் தொடுக்கப்பட்டதாகவும் வேறு கருத்து கணிப்புகள் கூறுகின்றன.

இவற்றை வைத்துப் பார்க்கையில் ஜோர்ஜ் புஷ்ஷிற்கு ஆதரவாக கருத்துக் கணிப் புக்கள் இருக்கவில்லை என்பது மட்டுமன்றி அடுத்த சனாதிபதித் தேர்தலை புஷ் எப்படி சமாளிக்கப் போகின்றார் என்பதும் வினா.

அதேநேரம் புஷ் மிகவும் சாதாரணமாக எண்ணிய ஈராக் போர் "பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய் மாறியது" போல அவருக்கு மிகுந்த அவஸ்தைகளையே உருவாக்கிவிட்டது.

இதனால் மீண்டும் சனாதிபதியாகும் ஜோர்ஜ் புஷ்ஷின் கனவு தகர்ந்து கூடப் போகலாம்.

ஈராக் போர் நன்மையளிக்கும் எண்ணெய்வளம் கொண்டு தனது நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த முடியும்; தீவிரவாதம், பயங்கரவாதம் என்பவற்றை அடியோடு அழிக்கும் நாயகன்தான் என்று செயற்பட்ட புஷ்ஷின் கனவுகள் இன்று அவருக்குப் பலத்த அடியை ஏற்படுத்திவிட்டது.

ஈராக்கில் சமநிலை இல்லை. தனது நாட்டிலும் செல்வாக்குச் சரிவு இதுதான் இன்றைய அமெரிக்க சனாதிபதியின் நிலை. எனவே ஜோர்ஜ்புஷ் வெற்றி பெறுவாரா? அல்லது ஜோன்ஹெறி அதைத் தட்டிப்பறிப்பாரா? என்பதை நவம்பர் மாத தேர்தலே நிர்ணயிக்கப்போகின்றது.

அ.தலைவாணி

## வன்னியில் கால்நடை உற்பத்தி மேம்பாடு தொடர்பாக விசேட கலந்துரையாடல்

(ஒட்டுசுட்டான்)

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் கடந்த வியாழன் காலை 10.00மணியளவில் வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணையில் விலங்குவேளாண்மைப் பகுதிப் பொறுப்பாளர் ஞானவேல் தலைமையில் நடைபெற்றது.

வன்னியில் கால்நடைகளின் அபிவிருத்தி ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் நடைபெறவுள்ள கண்காட்சி பற்றியும் சிறப்பு நடமாடும் சேவை இனவிருத்தி என்பன குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் கதிர்வேற்பிள்ளை, வடமாகாண உதவிப்பணிப்பாளர் இராமநாதன், வடகிழக்கு மாகாணப் பணிப்பாளர் சிவலிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டனர். இதில் கால்நடை வைத்தியர்கள் பிரதேச இணைப்பாளர்கள், ஆகியோர் கலந்துகொண்டனர். (05)

## பொலித்தீனை பாவிக்கத் தடை

இம்முறை பொதுத்தேர்தல்களுக்கு அலங்காரங்கள், தோரணைகள் கட்டுவதற்கு பொலித்தீனைப் பாவிக்க வேண்டாம் என போட்டி இடும் சகலகட்சி அங்கத்தவர்களையும் கட்சிகளையும் கேட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## பிரச்சினைக்குத் தீர்வில்லையேல் 10ம் திகதி முதல் வேலைநிறுத்தம்

### மருத்துவர்கள் அறிவிப்பு

(கொழும்பு)

வரும் பத்தாம் திகதி நடைபெறவிருக்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாவிட்டால் நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளப் போவதாக அரச மருத்துவர்களும் பல் மருத்துவர்களும் தெரிவித்துள்ளனர்.

சுகாதார அமைச்சு கடந்த இரண்டாம் திகதி விடுத்த சுற்று நிருபத்தின் விளைவாக தங்கள் சம்பளத்தில் பெரும் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# தமிழ்மக்களின் வாக்களிக்கும் உரிமையை அப்பட்டமாக மீற முயற்சிக்கக் கூடாது

## யாழ். மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்

**இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி மக்கள் வாக்களிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இல்லையேல் அந்த மக்களின் வாக்களிக்கும் உரிமை அப்பட்டமாக மறுக்கப்பட்டதாகவே அமையும் என்றும் யாழ். மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.**

வட-கிழக்கு இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் வாக்களிப்பினை ஏற்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இல்லையேல் யுத்தசூனியப் பிரதேசத்திலாவது வாக்களிப்பினை நடத்த வேண்டியது அவசியமாகும்.

என்று கோரி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு ஆயர் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். இக் கடிதத்தின் பிரதியினை ஆயர் பிரதமர் ரணில் விகிரம சிங்கவிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

சனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் மேலும்,

வடகிழக்கில் நடைபெறவிருக்கின்ற பொதுத்தேர்தல் தொடர்பாக இம்மடலை எழுதுகிறேன் வன்முறையும் குழப்பமுமற்ற சுதந்திரமான நேர்மையான பொதுத் தேர்தலாக இத்தேர்தல் இருக்க வேண்டும் என்பதே எமது விருப்பமாகும். எல்லா மக்களும் தேர்தலில் பங்குபற்ற சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

அரச நிறுவனங்களும், கச்சேரி போன்ற மற்ற நிறுவனங்களும் இங்கு ஒழுங்காக இயங்குகின்றன.அரசாங்கப் பரீட்சைகளான க.பொ.த.(சா/த), க.பொ.(உ/த) பரீட்சைகள் கல்வித் திணைக்களத்தினால் ஒழுங்காக நடத்தப்படுகின்றன.

வாக்காளர் தேர்தலில் பங்குபற்றி தமது பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யும் உரிமை மறுக்கப்படமுடியாத ஒரு உரிமையாகும்.

எனவே அரசாங்கம் தமது முழு அதிகாரத்தைப் பயன்படுத்தி தமது வாக்களிக்கும் உரிமையை மக்கள் பயன்படுத்த ஆவன செய்ய வேண்டும்.இத்தீர்வு நடைமுறைப்படுத்த முடியாததாயின் இருதரப்பினருக்கும் இடைப்பட்ட மனிதர்கள் இல்லாத பிரதேசம் முன்னுரிமை அடிப்படையில் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு பொதுத் தேர்தலுக்கான வாக் குச்சாவடிகளை அங்கு ஏற்படுத்தலாம்.

மேன்மை தங்கிய தங்களிடம் அரச கட்டுப்பாடு இல்லாத பகுதிகளில் வாழும் மக்கள் தமது சனநாயக உரிமையின் படி பொதுத் தேர்தலில் பங்குபற்ற தேவையான வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென மிக வினையமாக கேட்டுக் கொள்கின்றேன். இல்லாவிடில் அரச கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் வாழும் ஏராளமான மக்களின் வாக்களிக்கும் உரிமை அப்பட்டமாக மறுக்கப்பட்டதாகவே இருக்கும்.

தேர்தலுக்கு நீண்ட கால அவகாசம் இல்லாமையினால் பிரதி நிதிகளாக அரச அதிபர்கள் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ள தங்களின் முடிவு மிகவும் முக்கியமானது என்றும் கூறப்பட்டுள்ளது.

### அதிகரிப்பு!

குற்றச்செயல்களில் ஈடுபடும் மற்றும் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்படும் பெண்களையும் சிறுவர்களையும் தடுத்து வைப்பதற்கு யாழ்சிறைச்சாலையில் போதிய வசதிகள் இல்லை.இவ்வாறு மல்லாகம் நீதிபதி திருமதிச. இளங்கோவன் கூறியுள்ளார். அத்துடன் குடாநாட்டில் அண்மைக்காலமாக குற்றச் செயல்கள் தொடர்பான வழக்குகளில் பெண்கள், சிறுவர்கள் தடுத்து வைக்கப்படுவது அதிகரித்து வருகின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

# பயிலுநர் ஆசிரியர்களுக்கு இம்மாதம் சம்பளவுயர்வு

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பயிலுநர் ஆசிரியர்களுக்கு இம்மாத வேதனத்துடன் அரசு, வரவு செலவுத் திட்டத்தில் உயர்த்திய 1250 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது.

இதற்கான விசேட சுற்று நிருபத்தை மிக விரைவாக அனுப்புமாறு கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தில்லை நடராஜா அமைச்சின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் ஏ-எஸ்-ஜெயவர்த்தனாவிற்கு உத்தரவிட்டுள்ளார்.

# தேர்தல் வன்முறைகளைத் தடுக்க விசேட பொலிஸ் குழுக்கள்

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகள் அதிகரித்து வரும் பகுதிகளுக்கு விசேடபொலிஸ குழுக்களை அனுப்பிவைப்பதற்கு பொலிஸ் தேர்தல் கண்காணிப்பு பணியகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதன்படி கிழக்கு மாகாணத்திற்கு ஏற்கனவே விசேட பொலிஸ் அணியொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ள நுராதபுரம், சிலாபம்,கம்பளை,கண்டி, குருநாகல், மாத்தளை, நீர்கொழும்பு, இரத்தினபுரி ஆகிய பகுதிகளுக்கு எதிர்வரும் திங்கள் முதல் விசேட பொலிஸ் அணி அனுப்பி வைக்கப்படவுள்ளது என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை தேர்தல் வன்முறைகளைத் தடுப்பதற்கான ஒழுக்க விதிகளை தேசிய ஆலோசனைச் சபை' அறிமுகப்படுத்தியுள்ளது.

# மார்ச்-11ல் ஐ.ம.சு.மு.வின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக் கிழமை மூன்று மொழிகளிலும் வெளியிடப்படவுள்ளது.

இதனை முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிறேம்ஜயந்த் கூறியுள்ளார்.

தேர்தல் விஞ்ஞாபனம் திட்டவரைபை முன்னணியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் தற்பொழுது ஆராய்ந்து விருகின்றது. இனப்பிரச்சினைத் தீர்வு பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றிற்கு தேர்தல் விஞ்ஞாபனத்தில் முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# பண்டாரநாயக்க சகாப்தம் என்னுடன் முடிகின்றது நானே அடுத்த சனாதிபதி வேட்பாளராக நிற்பேன்

## -அநுரா பண்டாரநாயக்க வலியுறுத்து

(கொழும்பு)

பண்டாரநாயக்கவின் குடும்பத்திலுள்ள கடைசி அரசியல் வாதி நான்தான். என்னுடன் பண்டாரநாயக்க சகாப்தம் முடிவடைகின்றது. அதனால் சுதந்திர முன்னணியின் அடுத்த சனாதிபதி வேட்பாளர் தானே என்று அநுரா பண்டாரநாயக்க கூறி வருகின்றார்.

அத்துடன் சனாதிபதியின் பிள்ளைகள் ஒருவேளை அரசியலுக்கு வந்தாலும் அவர்கள் பண்டாரநாயக்கவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். அவர்கள் குமாரதுங்க குடும்பத்துக்குரியவர்கள் என்றும் கூறியுள்ளார்.

நான் எப்போதுமே ஒரு வலதுசாரி. அவ்வாறே தொடர்ந்தும் இருப்பேன். திறந்த பொருளாதாரம், வெளிநாட்டு முதலீடு, தனியார் துறையுடனான வளர்ச்சி என்பனவே எனது கொள்கையாகும். நான் ஒரு மார்க்ஸிற் அல்ல என்றும் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது அநுரா கூறியுள்ளார்.

# படித்த புத்திசாதுரியமுள்ள அனைவரும் எனது தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்க

## சனாதிபதி சந்திரிகா அறிவுரை

(கொழும்பு)

படித்த புத்தி சாதுரியமுள்ள இளைஞர் யுவதிகள் நாட்டின் எதிர்காலத் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும் என்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கேட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில; ஐக்கிய சுதந்திர முன்னணி நாட்டினதும் மக்களினதும் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு உறுதியானதும் மிகச் சாதுரியமானது மான தீர்மானங்களை அமுல் செய்வதற்கானத் திட்டங்களை ஏற்கனவே தயாரித்துள்ளது எனவும் கூறியுள்ளார்.

சந்திரிகா குமாரதுங்க அனைத்து முகாமைத்துவ இணைப்பு அதிகாரிகளோடும் பல்கலைக்கழக மாணவர்களோடும் சனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் நடந்த விஷேட கலந்துரையாடலின் போதே இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

இன்றைய பல இளைஞர் குழுக்கள் வன்செயலில்இறங்கி உள்ளதை சுட்டிக்காட்டியதுடன் இன்றைய சமூகம் ஒரு சிறு பிரச்சினைக்குக் கூட வன்செயலில் இறங்குவது ஒரு வழக்கமாகி விட்டதெனவும் விசனம் தெரிவித்துள்ளார்.

# கடந்த தேர்தலில் வன்முறையில் ஈடுபட்ட வேட்பாளர்கள் இம்முறையும் போட்டி

## -பெவ்ரல் அமைப்பு கவலை

(கொழும்பு)

கடந்த பொதுத்தேர்தலில் வன்முறையில் ஈடுபட்ட வேட்பாளர்களை இம்முறை பொதுத் தேர்தலில் நிறுத்த வேண்டாம் எனும் வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த முறை வன்முறையில் ஈடுபட்ட வேட்பாளர்கள் இம்முறையும் தேர்தலில் போட்டியிடுகின்றனர். இந்நிலையில் நீதியானதும், நியாயமானதுமான தேர்தல் நடக்கும் என்று உறுதி கூற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தேர்தலுக்கான பெவ்ரல் அமைப்பு எச்சரிக்கை விடுத் துள்ளது.

அத்துடன் நீதியானதும் நியாயமானதுமான தேர்தல் ஒன்று இடம்பெறுவதை உறுதிப்படுத்தும் முகமாகவும் தேர்தல் வன்முறைகளை குறைக்கும் நோக்குடனும் பெவ்ரல் அமைப்பு மேற்கொண்ட திட்டங்களுக்கு அரசியல் கட்சிகளிடமிருந்து பூரண ஆதரவு கிடைக்கவில்லையென்றும் மேற்படி அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்றிக்கோ கவலை வெளியிட்டுள்ளார்.

# தேசிய எழுச்சிப் பேரவையின் ஊரகக் கிளை விசேட கூட்டம்

(மல்லாவி)

ஊரக தேசிய எழுச்சிப் பேரவையின் விசேட கூட்டம் யோகபுரம் மத்தி கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் துணுக்காய்ப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை துணைச் செயலாளர் த.சுந்தரலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் சமூகச் செயற்பாடுகள் நிறைவேற்றல், வேலைத் திட்டங்கள் தமிழ் பேசும் மக்களின் சுகாதார மருத்துவ நடைமுறைகளை முன்னெடுத்தல், மாவீரர் போராளிகள் குடும்பநலன்களை மேம்படுத்துதல், கல்விசார் விழிப்புணர்வை வளர்த்தல், பாதிப்புற்றோருக்கான நிவாரணங்களைப் பெறுவதற்கு ஊக்கப்படுத்தல், சமூகச் செயற்பாடுகளை நிறைவேற்றல் சம்பந்தமான கருத்துக்களை கமக்கார அமைப்புச் செயலாளர் கோகிலதாஸ், கிராம அபிவிருத்திச் சங்கப் பொருளாளர் மா.ஜெயராமச்சந்திரன், துணுக்காய்ப் பிரதேச முன்பள்ளிகளின் நிர்வாகக் குழுத் தலைவர் மு.சபநாதன் ஆகியோர் வழங்கினர்.

மேற்படி நிகழ்வில் கிராம அபிவிருத்திக் கழகங்களின் பிரதிநிதிகள் அமைப்புக்களின் தலைவர்கள் செயலாளர்கள் ஏனைய அமைப்புப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (24)

### குண்டுடன் கைது!

(கொழும்பு)

பொது சன ஐக்கிய முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைக்குண்டுகளுடன் திங்கள் இரவு நிவித்திகல பொலிசாரினால் கைது செய்யப்பட்டு இரத்தினபுரி நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டுள்ளதாக நிவித்திகல பொலிஸ் அத்தியட்சகர் வைத்தியநாயக்க தெரிவித்துள்ளார்.



வவுனியா தெற்கு வலயக் கல்விஅலுவலகத்தில் நடைபெற்ற "கண்ணிவெடி அனர்த்தப் பாதுகாப்புக்கல்வி" தொடர்பான செயலமர்வில் ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. இரட்ணம் சிறப்புரையாற்றுவதனையும், கலந்துகொண்ட ஆசிரியர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.
(ஆறு.சுபாஸ்கரன் வவுனியா செய்தியாளர்)

# யாழ்.குடாநாட்டு தபாலகங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கையில்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள தபாலகங்களில் அதிகளவிலான பதவி வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாதுள்ளதன் காரணமாக மக்கள் தமக்குரிய சேவைகளைத் திருப்திகரமாக பெறமுடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. யாழ்.வாழ் மக்களின் தபால் சேவையைப் பூர்த்தி செய்யக் கூடியளவு உபதபாலகங்கள் பல்வேறு பகுதி களிலும் நிறுவிக்கொடுக்கப்பட்டுள்ளன.

எனினும் இவ்வாரத்தில் 520 தபாலகங்களில் உப தபாலதிபர் வெற்றிடங்கள் கடந்த ஐந்து வருங்களுக்கு மேலாக நிரப்பப்படாமல் இருக்கின்றது. இதைவிட தபால் விநியோகஸ்தர்கள், அலுவலக ஊழியர்கள் என நண்டகால வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இதனால் இத் தபாலகங்கள் ஊடாக மக்கள் எதுவித நன்மைகளையும் பெறமுடியாத சூழ்நிலையில் இவை பெயரளவிலேயே இயங்கிவருகின்றன. இது தொடர்பாக யாழ். மாவட்ட பிரதம தபாலதிபர் பல தடவை உயர் அதிகாரிகளுக்கு அறிவித்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. (33)

# யானைகளின் தொல்லையால் மக்கள் பெரும் நெருக்கடி

(மல்லாவி)

மூன்றுமுறிப்பு இளம்மருதங்குளம் பகுதியில் காட்டு யானைகளின் தொல்லைகளினால் அங்கு வாழ்கின்ற மக்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இக்கிராமங்களில் 100க்கு மேற்பட்ட குடும்பங்கள் விவசாயத்தை நம்பியும் அதன் தானியங்களை விற்பனை செய்வதற்கும் நட்டாங்கண்டல் ஊடாக மல்லாவி நகருக்கு 13 மைல் தூரம் மிகுந்த சிரமத்தின் மத்தியில் வரும் இமமக்கள் காட்டுப் பாதைகளில் காட்டு யானைகளினால் மதிய நேரங்களில் துரத்தப்படுவதாகவும் இளம்மருதங்குளம் பகுதியில் வாழ்கின்ற விவசாயியான பூலோகசிங்கம் என்பவரின் காணியில் பயன் தரும் மரங்களான வாழை, தென்னைகளையும் மூன்று முறிப்பு பகுதியில் வாழும் விவசாயியான அ.விஜயகுமார் என்பவரின் காணியில் பயிர்களையும் அழித்துள்ளன. (24)

# பாதுகாப்பான மின்சார விநியோகத்திற்கு வேண்டுகை

(கிளிநொச்சி

பாதுகாப்பற்ற மின்சார விநியோக நடைமுறைகளால் மக்கள் பெரும் ஆபத்தை எதிர்கொள்கின்றனர். ஸ்கந்தபுரம், அக்கராயன் பகுதிகளில் உள்ள மின் விநியோக கம்பங்கள் முறிந்து விழும் அபாய நிலையில் உள்ளதுடன் சில மின் கம்பங்கள் முறிந்தும் உள்ளன. உக்கிய நிலையில் உள்ள இக்கம்பங்களினால் அப் பகுதிகளில் அபாயமான நிலை தோன்றியுள்ளதை அவதானிக்கமுடிகின்றது. (15)

# அடிப்படை வசதிகளற்று இயங்கும் காரைநகர் முன்பள்ளிகள்

யாழ். காரைநகர் பிரதேசத்திலுள்ள முன்பள்ளிகள் யாவும் அடிப்படை வசதிகளற்றே இயங்கி வருவதாக பல்வேறு அமைப்புக்களாலும் சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது. கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள மேற்படி பகுதியில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் ஏராளமான மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர். கலாச்சாரம்,பொருளாதாரச் சூழல், இயல்பு வாழ்வுக்கான சூழல் என்பன அற்ற இப்பிரதேசத்தில்,

15 முன்பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் சுமார் 300 வரையிலான சிறார்கள் பயின்று வருகின்ற போதும் இச் சிறார்களின் கல்வியை வளப்படுத்தக் கூடிய கற்றல் சூழ்நிலை இங்கு காணப்படவில்லை, அத்துடன் முன்பள்ளிகள் யாவும் அடிப்படை வசதிகளற்ற தற்காலிக இடங்களில் இயங்கி வருகின்றது.

இதனால் சில பகுதிச் சிறார்களின் கல்வி எதிர்காலம் வெகுவாகப் பாதிக்கப்படும் அவலம் தோன்றியிருப்பதாக அப்பகுதி மக்களாலும் மக்களமைப்புக்களாலும் கவலை தெரிவிக்கப்படுகிறது. (33)

# அம்மன் மகளிர் சிறுவர் இல்லம் த.பு.கழகத்தால் பொறுப்பேற்பு

(அலுவலக செய்தியாளர்)

அம்பாறையின் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் போதிய வசதிகளற்று இயங்கி வந்த அம்மன் மகளிர் சிறுவர் இல்லம் அம்பாறை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்தம் மற்றும் பிற காரணங்களால் தமது தாய், தந்தை உறவுகளைப் பிரிந்தும், இழந்தும் வாழ்விற்கான ஆதாரங்கள் அனைத்தையும் இழந்து தவித்த 56க்கும் மேற்பட்ட பெண் பிள்ளைகளை உள்வாங்கி இயங்கி வந்த அம்மன் மகளிர் சிறுவர் இல்லம் போதிய வசதிகள் இல்லாத நிலையில் இயங்கி வந்ததை அவதானித்த தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்படி இல்லத்தை செம்மையாக நடத்தி நாட்டின் எதிர் கால செல்வங்களான இளம்சிறார்களை அறிவும், ஆளுமையும் மிக்கவர்களாக வளர்த்தெடுக்கும் நல்நோக்குடன் இயங்க வைக்க மேற்படி கழகத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேற்படி இல்லத்தில் எட்டு வயதுடைய ஐந்து பேரும் ஒன்பது வயதுடைய ஒன்பது பேரும், பத்து வயதுடைய எட்டுப் பேரும் பதினொரு வயதுடைய ஏழு பேரும், பன்னிரண்டு வயதுடைய ஐந்து பேரும்,பதின்மூன்று வயதுடைய பத்துப் பேரும், பதின்நான்கு வயதுடைய பத்துப்பேரும், பதினைந்து வயதுடைய ஒருவரும், பதினாறு வயதுடைய ஒருவருமாக 56 பெண் பிள்ளைகள் இங்கு தங்கி பயன்பெற்று வருகின்றனர். இந்த நிலையில் இவ் இல்லத்தைச் சிறப்பாகக் கொண்டு நடத்துவதற்குத் தாம் உதவிகளை எதிர்பார்ப்பதாகவும் அம்பாறை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் தெரிவித்தார். (லோ)

# இல்ல மெய்வன்மைப் போட்டியில் கவின் முகில் இல்லம் முதலிடம்

நட்டாங்கண்டல் அ.த.க. பாட சாலையின் வருடாந்த மெய் வன்மைப் போட்டி நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் கி.ஜெய மோகன் தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. மங்கல விளக்கினை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட துணுக்காய் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் சு. கிருஸ்ணராஜா, ஓய்வு பெற்ற கோட்டக் கல்வி அதிகாரி யோ.துரை சிங்கம் ஆகியோர் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக்கொடியை பாண்டியன்குளம் பிரதேச மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ஜே.ஜெகன் ஏற்றி வைத்தார். வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ச.அ. ஜெறோம் நட்டாங்கண்டல் வைத்தியர் எஸ்.பி. நடராஜா ஆகியோர் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் கவின்முகில் முதலாம் இடத்தையும்,விண்மீன் இரண்டாம் இடத்தையும் தன்மதி இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. (24)

# கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையால் சாவகச்சேரியில் மரநடுகைத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் மரநடுகைத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த காலங்களில் தென்மராட்சியின் பலபாகங்களிலும் ஏற்பட்ட இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கை களால் இலட்சக்கணக்கான பயன்தரும் மரங்கள் தறித்தும், போர் நடவடிக்கைகளாலும், குண்டுவீச்சுக்களாலும் அழிக் கப்பட்டுள்ளன.

இதனால் அப்பிரதேசத்தின் சூழல் நலனைக் கருத்திற்கொண்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அனுசரணையுடன் இம்மரநடுகைத்திட்டம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தற்பொழுது 600 பயன்தரும் மரக்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் கடந்த காலப் போரினால் பாதிக்கப்பட்ட இப்பிரதேச இயற்கை வளம் புத்துயிர் பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. (33)

# அறிவித்தல்

## போதனாசிரியர் பதவிகள் வெற்றிடம்

பின்வரும் பயிற்சி நெறிகளைப் பயிற்றுவிப்பதற்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள தகைமைகளை உடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து போதனாசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் என்னால் கோரப்படுகின்றன.

**பயிற்சி நெறி**

01) மோட்டார் சைக்கிள் திருத்துநர்

02) வீட்டு மின்னிணைப்பு

**அடிப்படைக் கல்வித் தகைமை:-**

க.பொ.த(சா/த) பரீட்சையில் தமிழ்/சிங்களம் மற்றும் கணிதம் ஆகியனவற்றில் திறமைச்சித்தியுடன் விஞ்ஞானம் அல்லது தொழில் நுட்பப் பாடத்திலும் திறமைச் சித்தியுட்பட எல்லாமாக ஆறுபாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தடவைகளில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். தே.க.பொ.த.பரீட்சையில் மேற்குறிப்பிட்ட திறமைச் சித்திக்குரிய பாடங்களுக்கு 'பீ' பெற்றிருத்தல் வேண்டும்.

**தொழில்நுட்பக் கல்வித்தகைமையும், அனுபவமும்:-**

* தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான சான்றிதழுடன் உரிய துறையில் 3 வருட செய்முறை அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது

* 3 வருட தொழில் பயிலுநர் பயிற்சியுடன் 3 வருடங்கள் குறிப்பிட்ட தொழில்புரிந்த அனுபவமும் இருத்தல் வேண்டும்.

அல்லது

* அரசாங்க தொழில்நுட்பக் கல்வி நிலையம் ஒன்றில் 1 வருட பயிற்சியைத் திருப்திகரமாக முடித்ததுடன், குறிப்பிட்ட துறையில் 5 வருட செய்முறை அனுபவமும் இருத்தல்வேண்டும்.

**வயதெல்லை:-** விண்ணப்பம் கிடைக்கும் இறுதித் திகதியன்று 55 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகள்:-**

ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்கப்படும். மாதாந்தம் ரூபா 5,000/-க்கும் ரூபா 6,000/-க்கும் இடைப்பட்ட தொகை இதற்கான ஊதியமாக வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் இதற்கென அனுமதிக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான கொடுப்பனவுகளைச் செலுத்துதல் வேண்டும்.

**முக்கிய கவனிப்பு:-**

நேர்முகப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட்சை மூலம் தேர்வு நடைபெறும்.

*உமது கல்வி மற்றும் தொழில் தகைமைகளுடன் உறவினரல்லாத இரு நடுவர் களின் பெயர்களையும் முகவரிகளையும் உமது விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிட்டு 2004.03.17 ஆம் திகதிக்குப் பிந்தாது கிடைக்கத்தக்கதாக அரசாங்க அதிபர், புனர்வாழ்வுக்கிளை,கச்சேரி,முல்லைத்தீவு எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும். மேற்குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் பத்திர மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் துறையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.*

(இமெல்டா சுகுமார்),
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு.

(சி.7168)



## சிந்தனைக்கு

மனித உரிமைக்கும் மனித நீதிக்கும் சமாதானத்திற்கும் குரலெழுப்பும் இந்த உலகமானது, உரிமை கேட்டு, நீதிகேட்டு, சமாதான வழியில் தீர்வு கேட்டு நிற்கும் எமது மக்களிற்குச் சார்பாகக் குரலெழுப்பவேண்டும். அதுவே உலகத்தின் இன்றைய தார்மீகக் கடப்பாடு ஆகும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 07-03-2004

## நெருக்கடி தவிர்க்க இயலாதது!

''வரும் பொதுத்தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காது விட்டால்; நாடு இக்கட்டான சூழ்நிலையை எதிர்நோக்கும்.'' என்ற முன்னாள் அமைச்சர் மிலிந்தமொறகொடவின் எச்சரிக்கையானது புதியதொரு எதிர்வுகூறல் அல்ல. இதுஅனைவராலும் எதிர்பார்க்கப்படும் ஒன்றாகவே நீண்டநாட்களாக உள்ளது.

இதேவேளை, தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான கட்சிகளும், அறுதிப்பெரும்பான்மையைப் பெறப்போவதில்லை. என்பதும் பலராலும் எதிர்பார்க்கப்படும் ஒன்றாகவே உள்ளது. இதன் மூலம் இத்தேர்தலானது, ஒரு கட்சியோ அன்றிக் கூட்டணியோ அறுதிப் பெரும்பான்மையைப் பெறப்போவதுமில்லை. ஒரு கட்சியும் பெரும்பான்மையுடைய அரசாங்கத்தை அமைக்கப்போவதுமில்லை என்பது எதிர்பார்க்கப்படும் ஒன்றாகவே உள்ளது. இம்மதிப்பீடு மாற்றமடைவதற்கு வாய்ப்புக்கள் இல்லையென்றே கூறலாம்.

ஆகையினால், முன்னாள் அமைச்சர் மிலிந்தமொறகொட கூறியிருப்பது போன்று இத்தேர்தல் நாட்டில் ஒரு இக்கட்டான நிலை தோன்றுவதற்கு வாய்ப்பை உருவாக்கும் என்று துணிந்தே கூறமுடியும். ஆனால், இதுகூட இரண்டு பிரதானசிங்கள கட்சிகளுக்கும், அவற்றின் கூட்டணிகளுக்கும் தெரியாததல்ல.

சனாதிபதி சந்திரிகா பாராளுமன்றைக்கலைத்து பொதுத்தேர்தலுக்கு உத்தரவிடும் முன்னரே நாடு பெரும் நெருக்கடியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது என்பது எச்சரிக்கப்பட்டதொன்றாகவே இருந்தது. அதாவது சமாதான முயற்சிகளுக்கு எதிராகப்போடப்பட்ட முட்டுக்கட்டைகளே நாடு நெருக்கடிகளை நோக்கிச் செல்வதற்குச் தயார் ஆகிவிட்டது என்பதை வெளிப்படையாக்கியிருந்தது.

குறிப்பாக மூன்று பிரதான அமைச்சுக்களை பறித்தெடுத்தமை, சமாதான முயற்சிகளை பெரும் பாதிப்பிற்குள்ளாக்கியிருந்தன. இதன் காரணமாக சிறிலங்கா அரசு பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கவேண்டியதாகியது. அதாவது உறுதியளிக்கப்பட்ட சிறிய உதவிகள் கூட கிடைக்கப்பெறுவது கடினமானதாகவே இருந்தது.

இதற்கு முன்னர், டோக்கியோ உதவி வழங்குவோர் கூட்டத்தில் 45000 கோடிரூபா உதவிவழங்குவோர் வழங்குவதற்கு தயாராக இருந்தபோதும், சமாதான முயற்சிகள் மு [illegible]ப்பட்டிருந்ததினால் இப்பெரும் நிதியுதவி இன்னமும் கிடை[illegible]க்கப்பெறவில்லை. அதாவது இவ்விடயமானது "கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை" என்பது போன்றதொரு நிலையையே உருவாக்கியிருந்தது.

ஆனால், சமாதான முயற்சிகளில் ஏற்பட்ட முட்டுக்கட்டையே இத்தகைய உதவிகள் கிடைக்கப்பெறாது போய்விட்டது என்பதை உணர்ந்திருந்தபோதிலும், சமாதான முயற்சிகளை முற்றிலுமாக ஸ்தம்பிக்கச்செய்யும் வகையிலேயே சனாதிபதி சந்திரிகாவினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, தேர்தலுக்கான திகதியும் அறிவிக்கப்பட்டது.

அதாவது, புதிய தேர்தல் ஒன்றினால் தற்போதைய நெருக்கடி நிலைக்கு தீர்வு எதையும் காணமுடியாது என்பது உணரப்பட்ட நிலையிலும், தேர்தல் ஒன்று அறிவிப்புச் செய்யப்பட்டமையானது எந்தவகையிலும் நாட்டின் எதிர்காலத்தை கருத்திற்கொள்ளாது எடுக்கப்பட்ட முடிவு மட்டும் அல்ல. நாட்டிற்கு எக்கேடு விளைந்தாலும் அரசியல் அதிகாரம் கைப்பற்றப்படவேண்டும் என்ற நோக்கில் மேற்கொள்ளப் பட்டவையாகும்.

ஆகையினால், இத்தேர்தலும் சரி இத்தேர்தலில் கிடைக்கப்போகும் முடிவும் சரி, நாட்டை இக்கட்டான நிலைக்கு இட்டுச்செல்லும் என்பது மிலிந்தமொறகொட போன்றவர்கள் கூறித்தான் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதல்ல. இவை அனைவருக்கும் தெரிந்ததொன்றே. ஆகையினால் இத் தேர்தலின் பின்னர் கூட நாடு நெருக்கடியில் இருந்து விடுபடவோ அன்றி இடையூறு கள் இன்றி செயற்படக்கூடிய வாய்ப்பைக் கொண்டதாகவோ இருக்கமாட்டாது.

இலங்கையின் தற்போதைய நிலையில் தேர்தல்கள் வரலாம், போகலாம், ஆனால், இனப்பிரச்சினைக்குத் தீர்வோ, பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுதலையோ கிடைத்துவிடப்போவதில்லை. இலங்கையில் அரசியல் பொருளாதார நெருக்கடிகள் தீர்க்கப்பட வேண்டிய நிலை ஏற்படின் அதற்கு திறமையும், அர்ப்பணிப்பும் மிக்க தலைமைகள் நாட்டிற்குத் தேவை. ஆனால், அநுராபண்டார நாயக்க போன்ற கோமாளித்தனம் மிக்கவர்கள் தலைமைத்து வத்திற்கு ஆசைப்பட்டு நிற்கையில் அது எவ்வாறு சாத்திய மாகும்?

# சிறிலங்கா பல்லின மக்கள் வாழும் நாடல்ல பாராளுமன்றை பௌத்த நிலையமாக மாற்ற வேண்டும்

### ஓமல்பே சோபித்த தேரர் கூறுகிறார்

சிறிலங்கா ஒரு பௌத்த நாடாகும் சிறிலங்காவை பௌத்த நாடு என உறுதி செய்வோம் இது பல்லின மக்கள் வாழும் நாடு என்றோ அல்லது அவ்வாறு கூறுவதற்கோ நாம் என்றும் அனுமதியோம்

இவ்வாறு சிங்கப்பூரின் பிரதான பௌத்த நிலையத்தின் பிரதம தேரர் ஓமல்பே சோபித்த கூறியுள்ளார்.

இறக்குவானை நகரில் நடைபெற்ற பௌத்த குருமார்களின் விசேட மாநாட்டில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பாராளுமன்றம் பௌத்த தர்மத்தை விட்டு விலகிச் செல்கின்றது எனவே அதனை முழு பௌத்த நிலையமாக மாற்ற வேண்டும் அதற்கு எம்மாலான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்.

சோம தேரர் இறந்த பின்னர் இலங்கை வாழ் பௌத்த மக்களுக்கு பல்வேறு அநீதிகள் இழைக கப்பட்டுள்ளன. பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். இதன் காரணமாகவே பௌத்த பிக்குகள் அனைவரும் ஒன்றிணைந்து ஹெல உறுமயவின் ஊடாக தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

புத்த சாசன அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கபடுவதற்கு இருவாரங்கள் இருக்கும் வேளையில் சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டார்.

பிரதமருக்கோ, சனாதிபதிக்கோ நாட்டின் உண்மைநிலை தெரியவில்லை. இனப்பிரச்சினை என்றால் கூட என்னவென்று தெரியவில்லை.

இலங்கையின் கரையோரப் பகுதிகளில் அனேகமானவை கிறிஸ்தவ மயமக்கப்பட்டு பௌத்தமதம் மழுங்கடிக்கப்பட்டு வருகின்றது. இனங்களிடையே ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதற்காகக் கூறி நாட்டில் மதமாற்ற நடவடிக்கைகளே முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

# கொழும்பில் நீர்வெட்டு தொடர்கின்றது காரணத்தை கண்டறிய குழு அமைப்பு

(கொழும்பு)

கொழும்பில் ஏற்பட்டுள்ள பாரிய குடிநீர்ப்பிரச்சினையானது சிறிலங்காவின் வரலாற்றில் முன்னர் எப்போதும் ஏற்பட்டதில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னறிவிப்பு ஏதுமின்றி பலமணிநேரம் நீர்வெட்டு ஏற்பட்டதை அடுத்து பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்த நீர்வினியோகத்தடைக்கான காரணத்தை அறிவதற்காக திறைசேரிச் செயலாளர் சரித்தரத்வத்தை தலைமையிலான குழு ஒன்று அரசாங்கத்தால் அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் நீர்வெட்டு அமுலில் இருக்குமெனவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நீர் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தற்போது நிலவும் நீர்த்தட்டுப்பாடு காரணமாக ஜெயவர்த்தனபுரம் பல்கலைக் கழகம் மூடப்பட்டுள்ளது. நீர்வினியோகம் வழமைக்கு வந்ததும் பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்படும் என் பல்கலைக்கழக பதில் உபவேந்தர் தெரிவித்துள்ளார்.

# இடைக்கால தேர்தல் அறிவிப்பால் அபிவிருத்தி திட்டங்கள் நிலைகுலைந்தன

### -பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

இடைக்கால தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டமையினால் அரசாங்கத்தின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை பின்போட வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குண்டசாலைவிதான என்ற இடத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில், கடந்த இரண்டு வருடங்களில் சிறிலங்காவில் பல தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு ஜப்பானும் சிங்கப்பூரும் முன்வந்துள்ளமையை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒருநாட்டை அபிவிருத்தி செய்வதற்கு மதிப்பீடு, செயற்றிட்டம், முறையான முகாமைத்துவம் ஆகியன இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இத்தகைய சூத்திரங்களைப் பயன்படுத்தி வளர்ச்சி அடைந்துள்ள மலேசியாவையும் அவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

இதேவேளை கணினித்துறையில் ஒருகட்டம் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் சனாதிபதியின் திடீர் தேர்தல் தீர்மானத்தினால் அமுல் செய்ய முடியாமல் போய் விட்டதெனவும பிரதம மந்திரி மேலும் கூறியுள்ளார்.

# ஒலுவில் துறைமுக விவகாரத்தில் சனாதிபதியின் சுயரூபம் தெரிகின்றது

### - மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீம் கூறுகின்றார்

(கொழும்பு)

ஒலுவில் துறைமுக விவகாரத்தில் சிறிலங்கா சனாதிபதி தனது சுயரூபத்தை வெளிககாட்டியுள்ளார் என சிறிலங்க முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அட்டாளைச் சேனையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உயைாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஒலுவில் மக்களுக்குப் பணம் கொடுத்துத் தான் வாக்குப் பெற வேண்டும் என்ற அவசியம் முஸ்லிம் காங்கிரஸ்சிற்கு இல்லை என்பதை சனாதிபதி தெரிவித்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# பழிவாங்கும் அரசியல் கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

### - சோமவன்ச அமரசிங்க தெரிவிப்பு

ஆயுதப் போராட்டத்தைவிட தத்துவார்த்தப் போராட்டம் சிறந்தது என்பதை இந்திய அசோகமன்னர் கூட ஏற்றுக்கொண்டார். இதன்படி பழிவாங்கும் அரசியல் கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க அனைவரும் பாடுபடவேண்டும்.

இவ்வாறு ஒழுக்க அரசியல் கலாச்சாரத்தையும் சேர்த்து வலியுறுத்தி ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க கூறியுள்ளார்.

ஏப்பிரல் 2ஆம் திகதி இந்த நாட்டில் புதிய அரசியல் வரலாறு உதயமாகிறது. கடந்த 50 வருடங்களாக நாம் இழந்து கொண்டிருந்த ஒழுக்கம் வாய்ந்த அரசியல் கலாச்சாரப் பண்புகளை மீளப் பெற்றுக் கொள்வோம் என்று நான் உறுதிகூறுகிறேன்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்தால் அனைத்துக் கிராமங்களுக்கும் பின் தங்கிய பிரதேசங்களுக்கும் கணனி வசதிகளை ஏற்படுத்துவோம் ஆங்கிலத்தைத் தடைசெய்துவிடுவோம் எனும் பீதி நிலவுகின்றது. ஆனால் பின் தங்கிய பிரதேச மக்களும் ஆங்கிலம் பேசக்கூடிய வகையில் அனைத்து மொழிகளையும் கற்க ஏற்பாடு செய்வோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# மரவள்ளிக் கிழங்கு சாப்பிடும் யுகம் மீண்டும் உண்டாவதைத் தடுக்க எமக்கு வாக்களியுங்கள்

### - அமைச்சர் லொக்குபண்டார தெரிவிப்பு

மரவள்ளிக்கிழங்கு சாப்பிடும் யுகம் மீண்டும் உண்டாவதைத் தடுக்க இன, மத,பேதமின்றி மக்கள் ஐக்கிய தேசிய முன்னணிக்கு வாக்களியுங்கள். என்று நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு, தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் லொக்கு பண்டார கூறியுள்ளார்.

பசறையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போதே அவர் எவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; தமிழ் ,சிங்கள், முஸ்லிம் மக்கள் ஆதரவு ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கும் வரை பொதுசன ஐக்கிய முன்னணியாலும், மக்கள் விடுதலை முன்னணியாலும் எம்மை ஒன்றும் செய்யமுடியாது. பொ.ஐ.மு.வும், ஜே.வி.பி.யும் ஆட்சியைப் பிடித்து விடுவோம்என்று கனவில் மிதக்கின்றது. இது ஒருநாளும் பலிக்காது என்பதை ஏப்பிரல் 2ஆம் திகதி தேர்தல் வெளிக்காட்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## நகல்..

பாதுகாப்பு அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இப்பதில்குறித்துபிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அனுமதியளித்துள்ளனர். இந்த நகல் திட்டத்தில் ஆயுதக் கொள்வனவு, படையினருக் கான பயிற்சி, புலனாய்வுத் தகவல களைப் பரிமாறிக் கொள்ளல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. (32)

## தலைமன்னார்..

ளில் தாங்கியுள்ள குடும்பத்தினர் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

தலைமன்னார் மீனவர்களை அவர்களின் படகுடன் விடுதலை செய்ய உதவுமாறு முன்னாள் பாரளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதனிடம் மீனவரின் குடும்பத்தினர் விடுத்த வேண்டுகோளையடுத்து அவர் இலங்கைக்கான இந்தியத் தூதுவரை மீனவர்களையும் படகையும் விடுவிக்குமாறு கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

இதேவேளை இலங்கை கடற்பகுதிக்குள் அத்து மீறிப் பிரவேசித்த இந்திய மீனவர்கள் சிலரை மன்னார் மீனவர்கள் பிடித்து இலங்கை கடற்படையினரிடம் கையளிக்க முற்பட்ட வேளை இந்திய மீனவர்கள் தங்களைக் இலங்கைக் கடற்படையினரிடம் கையளிக்க வேண்டாம்மென கெஞ்சிக் கேட்டதையடுத்து இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

## தனது...

சரியாகச் செயற்படுகின்ற போது நாம் அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடியாது. அவர் தவறுவிடுகின்ற போது ஒழுங்கு நடவடிக்கையை நாம் எடுத்திருக்கின்றோம். அதனை சரியாக எமது தலைமைப்பீடம் செய்திருக்கிறது என்று தான் நான் கருதுகிறேன். புலனாய்வு அமைப்புக்கள் மிகவும் பலமாகவே உள்ளது. எங்களது விசேடதளபதி, தளபதிகள், பொறுப்பாளர்களுடன் எமது புலனாய்வு அமைப்பு பொறுப்பாளர்களும் வந்து தலைவருக்கு அவரின் தவறான நடவடிக்கைகள், செயற்பாடுகள் போன்றவற்றை தெளிவுபடுத்திய காரணததால்தான் எமது தலைமைப்பீடம் ஒரு உறுதியாக தெளிவான நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

☐ மட்டக்களப்பு அம்பாறை பிராந்திய மக்களுக்கு நீங்கள் என்ன செய்தியை கூற விரும்புகிறீர்கள்?

எங்களுடைய தலைவர் சார்பாகவும் தலைமைப்பீடம் சார்பாகவும் மட்டு-அம்பாறை மாவட்ட மக்களுக்கு நாங்கள் ஒரு தெளிவான செய்தியைச் சொல்ல விரும்புகிறோம். எங்களுடைய விசேட தளபதி, தளபதிகள், அரசியல் பொறுப்பாளர்கள் எல்லோருமே எமது தலைவருடன் இணைந்து தீர்க்கமான முடிவுகளை எடுத்திருக்கிறார்கள். ஆகவே மட்டு-அம்பாறை மாவட்டத்தில் வாழ்கின்ற எல்லா மக்களும் எவ்வித பதட்டமோ அச்சமோ அடையத் தேவையில்லை. தெளிவாக எமது தலைமைப்பீடம் அந்த மக்களின் எதிர்காலத்துக்காக அர்ப்பணித்துக்கொள்ள மிகவும் உறுதியோடு இருக்கிறது என்ற செய்தியை எனது தலைவர் சார்பாகவும் அமைப்பு சார்பாகவும் கூறிவைக்க விரும்புகிறேன். அதுமட்டுமன்றி வடக்குகிழக்கு இணைந்த எமது தாயகத்தை பிரித்து எம்மை பலவீனப்படுத்தும் சக்திகளும் துணை போகநிற்கின்றார்கள். ஆகவே எமது மக்கள் அனைவரும் நாம் ஒன்றுபட்ட தாயகத்திலே பலத்தோடும் உறுதியோடும் நாம் இருக்கின்றோம் என்பதில் எமது மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள். தற்போது ஏற்பட்டுள்ள தனிப்பட்ட கருணாவின் நடவடிக்கைகளை அவரின் கருத்துக்களை கவனத்தில் எடுக்கவேண்டிய தேவையேயில்லை. ஆகவே நாம் எமது தலைமைப்பீடத்தினுடைய தீர்மானங்களையும் இன்றைய நிலைப்பாடுகளையும் நாம் தெளிவுபடுத்தியிருக்கிறோம். எமது மட்டு-அம்பாறை மாவட்டங்களை நிர்வகிக்கின்ற சகல தலைமைத்துவங்களும் இன்று உங்கள் மத்தியில் பிரசன்னமாகியிருக்கிறார்கள். ஆகவே அந்த மக்கள் முழுநம்பிக்கையோடு இருக்கலாம் என்று நான் நம்புகின்றேன்.

☐ தற்போது நடக்கப்போகின்ற தேர்தலில் உங்களுடைய நிர்வாக கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதிகளில் தேர்தல் நடத்தப்படுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படாது என்ற விதமான பேச்சுக்கள் அடிபடுகின்றன. அப்படியான ஒரு சூழ்நிலையில் உங்களது நடவடிக்கைகள் எப்படி இருக்கும்?

எங்களைப் பொறுத்தவரையில் ஒருயுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலில் உள்ளகாலம். சமாதானச் சூழல் நிலவுகின்ற காலத்தில் சனநாயக சூழலில் இந்த பகுதி மக்களும் இணைந்து கொள்வதற்கு அரசாங்கமோ அல்லது சம்பந்தப்பட்டவர்களோ தடையாக இருப்பது நிச்சயமாக இந்த மக்கள் சில தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கான நிர்ப்பந்தத்துக்குள் எதிர் காலத்தில் தள்ளப்படுவார்கள் என்பதே எங்களுடைய நிலைப்பாடாக இருக்கிறது. ஆகவே சர்வதேச சமூகத்தினிடமும் சகல தரப்பினரிடமும் இந்த மக்களின் நிலைப்பாடுகளை தெளிவுபடுத்தியிருக்கிறோம். அவர்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்றே நாங்கள் நம்புகிறோம்

நேற்றுக் காலை பத்து மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் தமிழீழ அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் ஆரம்பமான இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட விசேட தளபதி ரமேஸ், மட்டு-அம்பாறை மாவட்ட தளபதி ராம் மட்டு. அம்பாறை மாவட்டதுணைத் தளபதி பிரபா, மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மூத்த உறுப்பினர் தளபதி றமணன், ஜெயந்தன் படையணி சிறப்புத் தளபதி ஜெயாத்தன், முக்கிய உறுப்பினர் றொசான், நளன் உட்பட்ட தமிழீழ விடுதலைப புலிகளின் தளபதிகள் பொறுப்பாளர்கள் போராளிகள் என பெருமளவானர்கள் கலந்து கொண்டனர். (லோ)

## மட்டு...

ரது கட்டளைக்குக் கீழ்படிய மறுத்ததோடு, தமிழீழத் தேசியத் தலைமையைச் சந்தித்து அங்குள்ள உண்மை நிலையினைத் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.இதற்கமைய கருணா அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிருந்தும் அவரது பொறுப்பிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார். மட்டு-அம்பாறை மாவட்டத்தின் விசேட தளபதியாக ரமேஸ் அவர்களும் தளபதியாக ராம் அவர்களும் துணைத் தளபதியாக பிரபா அவர்களும் அரசியல்துறைப் பொறுப்பாளராக கௌசல்யன் அவர்களும் தமிழீழத் தேசியத் தலைமையால் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள தமது பொறுப்புக்களை ஏற்று எமது அமைப்பின் அதிகாரபூர்வமான பிரதிநிதிகளாகச் செயற்படுவார்கள் என்பதை அறியத்தருகிறோம. என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செம்மணியில்..

புதைகுழியை இனங்கண்டு தோணடியவர் என்பதனாலேயே பொலிசார் இவரைக்கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். எனினும் தமது பணியாளரான இவர் கைது செய்யப்பட்டுள்ளமை குறித்து "கலோரஸ்" அமைப்பு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.(33)

## மட்டு. புறந்தள்ள..

கேள்வி:-

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தளபதி கருணாவை அவரது பொறுப்பில் இருந்து நீக்கியிருக்கிறது. இந் தநிலையில் அவர் தனது கையில் உள்ள அதிகாரத்தை கைவிட மறுத்தால் என்ன நடக்கும்?

★ உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும் விடுதலைப் புலிகள் அமைப்பில் முடிவுகளை எடுக்கின்ற அதிகாரம் எமது தேசியத்தலைவருக்குமாத்திரமே உள்ளது. அந்தவகையில் எமது தலைவர் எடுத்த முடிவை கருணா ஏற்றுக்கொள்ளமறுத்து அவர் தனது முடிவை மாற்றாமல் இருநதால் இது விடயம் தொடர்பாக நாம் தலைவருடன் கதைத்து சுமுகமான அடுத்தகட்ட நடவடிக்கைக்கு நாங்கள் நகர்வோம்.

கேள்வி:-

முப்பதுக்கு மேற்பட்ட புலிகளின் பொறுப்பாளர்களில் எவரும் மட்டு-அம்பாறை மாவட்டங்களை சேர்ந்தவர்கள் அல்ல என்றும் மட்டு. அம்பாறை மாவட்டங்களை சேர்ந்தவர்கள் புலிகளின் தலைமையால் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள் என்று கருணா குற்றம் சாட்டிஉள்ளார்?

★ கருணாவின் இந்த கருத்து அவரது தனிப்பட்டமுடிவு ஏன் என்றால் விடுதலைப்புலிகள் அமைப்பில் பல்வேறுபட்ட பிரிவுகள் இருக்கின்றது. அதில் முக்கியமாக தலைமைச் செயலகம் என்று ஒரு செயலகம் உள்ளது. அந்த தலைமைச் செயலகம் தான் விடுதலைப்புலிகளின் அனைத்து பிரிவுகளையும் கட்டுப்படுத்துகிறது. இந்த தலைமைச் செயலகத்துக்கு பொறுப்பாக இருக்கின்ற புதியவன் என்ற போராளி மட்டக்களப்பை சேர்ந்தவர் இதிலிருந்து நீங்கள் ஏனையவற்றை விளங்கிக் கொள்ள வேண்டும். அது மட்டுமன்றி கருணா புலிகள் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினர்களில் ஒருவர் அது மட்டுமன்றி கடந்த யுத்தகாலங்களின் எமது தலைவர் பிரபாகரனின் தலைமையின் கீழ் அவருக்கு அடுத்தபடியாக இருந்து இராணுவத் தளபதியாக யுத்தகளங்களை வழிநடத்திக் கொண்டிருந்தவர் இதைவிட பெரியபதவி என்றால் என்னைப் பொறுத்த மட்டில் நகைப்பாக இருக்கிறது.

கேள்வி:-

உங்களால் வெளியிடப்பட்ட தலைமைச் செயலக அறிக்கையின் படி யாரோ தீயசக்திகளின் தூண்டுதலால் இது நடத்தப்பட்டிருக்கலாம். என கூறியிருக்கிறீர்கள் அந்த தீயசக்திகள் யார் என குறிப்பிட முடியுமா?

★ அந்த தீயசக்திகள் யார் என்பதை இந்த இடத்தில் இப்பொழுது எம்மால் கூற முடியாது.

கேள்வி:-

கருணாவால் எடுக்கப்பட்ட இத்தகைய முடிவுகள் வெளிவந்த பின்னார் அதாவது கடந்த இரண்டு நாட்களாக மட்டு-அம்பாறை மாவட்ட மக்களிடையே பெருத்த துயரமும், கலக்கமும் ஏற்பட்டிருக்கிறது அந்த மக்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

★ அந்த மக்களது துயரங்களையும் அங்கு இருக்கின்ற போராளிகளின் நிலைப்பாட்டையும் அறிந்துதான் நாங்கள் இங்கு வந்தோம். அங்குள்ள மக்களும் போராளிகளும் கேட்டார்கள் இதற்கு என்ன தீர்வு தலைவரிடம் இருந்து என்ன முடிவு வந்தது. என்று நாம், அவர்களுக்கு கூறினோம் இதற்கான சரியான முடிவை நாம் தலைவரிடம் சென்று கலந்துரையாடிய பின்னர் தலைவரின் முடிவுஎன்ன என்பதை நாங்கள் உங்களுக்கு கூறுவோம் என அவர்களிடம் கூறினோம் நாங்கள் இங்கு வந்ததன் நோக்கம் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்களின் பதட்டத்தையும், போராளிகளின் பதட்டத்தையும் தனித்து அவர்களின் இழப்பை இல்லாமல் செய்வதற்காக தலைவருடன் கூடி முடிவெடுக்க வந்திருக்கிறோம்.

கேள்வி:-

நீங்கள் கூறினீர்கள் அந்த தீயசக்தியை அடையாளம் கண்டு இங்கு குறிப்பிடுவது சரியில்லை. என்று ஓரளவுக்கேனும் சூசகமாக எந்தத் தரப்பு என்று செல்ல முடியுமா?

★ தமிழீழ நீதிநிர்வாகம் மட்டு-அம்பாறை மாவட்டங்களில் செயலிழந்து விட்டது என்ற செய்திக்கு உங்களது பதில் என்ன?

இந்த இடத்தில் முதலாவது வினாவிற்கான விடையை நாம் கூறவிரும்பவில்லை அது பற்றி எமது தலைவருடன் பேசி முடிவு எடுப்போம். உங்களது இரண்டாவது வினாவான நீதிநிர்வாகம் செயலிழந்தமை என்பது ஏற்கனவே நான்குறிப்பிட்டதை போன்று கருணா என்கின்றதனி மனிதனால் தான் இத்தகைய பிரச்சினைகள் உள்ளதே தவிர மற்றும்படி வேறு எந்தப்பிரச்சினையும் அங்கு இல்லை ஏன் என்றால் நான் கருணா அம்மானுக்கு அடுத்த தளபதியாக இருந்து மட்டு- அம்பாறை மாவட்டமக்கள் மத்தியில் வேலை செய்து கொண்டுவந்தோம். போராளிகள் மத்தியில் இருந்தோம். இந்த நிலையில் அங்குள்ள தளபதிகளினதும் போராளிகளினதும் நிலைப்பாடுகள் எங்களுக்கு நன்கு தெரியும் எனவே அவர்களுக்கு தலைவரது முடிவில் இருந்து எந்த மாற்றமும் வராது என்பதை அவர்களுக்கு உறுதியாக கூறிவைக்க விரும்புகின்றேன். ஏனென்றால் அங்குள்ள போராளிகளும் மக்களும் தலைவருக்குமிகவும் விசுவாசமானவர்களாக வேதான் இருக்கிறார்கள்.யுத்தம் ஒய்ந்த அமைதியான காலகட்டத்தில் தேசியத் தலைவர் அவர்கள் அடிக்கடி எமக்கு செய்திகளை தருவார். இந்த காலகட்டங்களில் படுகொலைகளையோ, கடத்தல்களையோ மேற்கொள்ளாது மிகுந்த அவதானத்துடன் செயல்பட வேண்டும். எல்லா இடங்களிலும் படுகொலைகளும் கடத்தல்களும் நடந்து கொண்டிருக்கிறது. இது எப்படி எங்கு நடக்கிறது என்பதை ஆராயும் படியும் எமக்கு அடிக்கடி கூறுவார். இதில் நாமும் மிக கவனம் எடுத்து எங்களுடைய நடவடிக்கைகளை மேற்கொள்வோம். ஆனாலும் அங்கு கடத்தல்களும் காணாமல் போதல்களும் நடந்து கொண்டிருந்தது. இது மட்டு-அம்பாறை மாவட்டத்தில் மட்டுமல்ல இலங்கையின் பல இடங்களிலும் நடந்து கொண்டிருக்கின்ற இதனைகண்டு பிடிக்க வேண்டும் என அடிக்கடி கருணா அம்மானிடம் நாம் குறிப்பிட்டோம்.

கேள்வி:-

தலைவருடன் சேர்ந்து கருணா தோளுக்கு தோள் நின்று இராணுவ நடவடிக்கைகளில் சில முடிவுகளை எடுத்திருக்கின்றார் திட்டமிடல்களை மேற்கொண்டிருக்கிறார். இந்தநிலையில் கருணாவை இழந்து இராணுவ ரீதியில் புலிகள் இயக்கத்தை பாதிக்காதா?

★ என்னைப் பொறுத்தவரையில் அது அந்தப் பலவீனமும் இல்லை ஏன் என்றால் ஒரு தனி மனிதனைதான் தலைவர் விலத்தியிருக்கிறார் அதனால் இயக்கத்துக்கு எந்தப்பாதிப்பும் ஏற்படப் போவதில்லை.

கேள்வி:-

நீங்கள் இப்போது விசேட தளபதி என்ற பொறுப்பை ஏற்றுக் கொண்டு மட்டக்களப்பு போக இருக்கிறீர்கள் நீங்கள் அங்கு போனால் கருணாவுடன் மோதல் நிலை ஏற்படுமா? அவ்வாறு மோதல் நிலை ஏற்பட்டால் அது சமாதானத்துக்கும் மக்களின் வாழ்வியலுக்கும் துன்பத்தை ஏற்படுத்துமா? தேர்தல் நடைபெறும் பொழுது இந்தக்குழப்ப நிலை தேர்தலை குழப்பும் விதத்தில் அமையாது என்று உங்களால் ஏதாவது உத்தரவாதம் தரமுடியுமா?

★ விடுதலைப் புலிகள் அமைப்பிலேபல கட்டுப்பாடுகள் இருக்கின்றது. நாங்கள் இயக்கத்தில் இணைகின்ற பொழுதே தலைமைப் பீடத்தின் கட்டளையை ஏற்க மறுத்தால் அதன் கட்டுப்பாடுகளை மீறினால் அவர் இயக்கத்தில் இருந்து விலகப்படுவார். என்ற சத்தியப் பிரமாணம் எடுத்தே போராட்டத்தில் இணைவோம் இது கருணா அம்மான் அவர்களுக்கும் நன்கு தெரியும் இதிலிருந்து அவர் இயக்கத்தை விட்டுவிலகிப் போவார் என்று நான் நினைக்கிறேன்.

கேள்வி:-

கருணா கூறியிருக்கிறார் கிழக்கிலிருந்து ஆயிரக்கணக்கான போராளிகளை வடக்கிற்கு அனுப்பும் படி கேட்டதற்கு தான் அதற்கு இணங்க முடியவில்லை என்றும் அடுத்து அங்கு நடந்த அரசியல் கொலைகள் அனைத்தும் விடுதலைப்புலிகளின் புலனாய்வு அமைப்பினால்தான் மேற்கொள்ளப்பட்டது என்றும் ஒரு குற்றச்சாட்டை முன்வைத்திருக்கிறார் இது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

★ இந்த அமைதிக்காலத்தில் மட்டக்களப்பில் இருந்து போராளிகளை இங்கு தலைவர் அழைத்தது என்பது பொய்யான தகவல். அங்கு நடந்த கொலைகள் புலனாய்வுத்துறையால் செய்தது என்பதை நாம் அங்கிருந்த போது அவர் எங்களிடம் அவற்றை குறிப்பிட வில்லை. புலனாய்வுத் துறை என்பது எங்களது தலைவரது நேரடி கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. அதாவது நாங்கள் அனைவரும் எந்த துறையாக இருந்தாலும் சரி அதனை நெறிப்படுத்துவது எங்களது தேசியத் தலைவர். புலனாய்வுத்துறை பொட்டு அம்மானுடைய துறை என்று கூறுவதை நாங்கள் மறுக்கின்றோம். அது நேரடியாக தலைவரது வழிநடத்தலில் நடக்கின்றது ஏற்கனவேஅந்தப் படுகொலைகள் நடக்கும் போது நாம் அதனை கண்டறிய வேண்டும். இதற்கு நீங்கள் ஆலோசனை கூறவேண்டும் என்று நாம் அவரிடம் அடிக்கடி கூறுவோம் அவர் இன்று இதனை ஒரு பிரச்சினையாக எடுத்திருப்பது சிந்திக்கவேண்டி உள்ளது.

கேள்வி:-

வடக்கில் வாழ்கின்ற தமிழர்கள் கிழக்கில் வாழ்கின்ற தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்துகின்றார்கள் என்ற குற்றச்சாட்டு பொதுவாக முன்வைக்கப்படுகின்ற ஒரு குற்றச் சாட்டு. இந்தச் சூழ்நிலையில் அத்தகைய ஒருநிலை உருவாகாத வகையில் இதை எவ்வாறு முகாமைத்துவப்படுத்தப் போகிறீர்கள்?

★ மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத்திலே நீண்ட காலங்களாக நாங்கள் தான் நிர்வாக வேலை மேற்கொண்டு வருகிறோம். அங்கிருக்கின்ற மக்களுடைய நிலைப்பாட்டை பூரணமாக அறிந்த தளபதிகளும் பொறுப்பாளர்களும் தான் இந்த இடத்தில் இருக்கின்றோம். எனவே அங்கிருக்கின்ற மக்கள் மத்தியில் எல்லா மாவட்டங்களையும் சேர்ந்த புத்திஜீவிகள் எல்லாம் வேலை செய்கின்றனர். அவர்கள் மத்தியிலே இத்தகைய குழப்பமான செயல்பாடுகள் இல்லை. ஒருசில குழப்பத்துக் குரியவர்கள் இத்தகைய கதைகளைப் பரப்பிக்கொண்டிருக்கின்றார்கள். எங்களுடைய விடுதலைப்போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதற்காகவும், பிரித்துக்காட்டுவதற்காகவும் பல செய்திகள் வெளியிடப்பட்டுக்கொண்டும் இருக்கிறது. அந்தவகையில் ஒருசிலர் குறிப்பிடுகின்ற செய்திகளை நாம் பெரிதுபடுத்துவதும் அல்ல. எனவே எங்களுக்கு நம்பிக்கையிருக்கிறது. அனைத்து மக்களும் மகிழ்வோடும் நம்பிக்கையுடனும் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத்தில் தமது கடமைகளைச் செய்துவருகின்றனர். அதில் வருகின்ற சில சிக்கல்களை நாம் அவர்களுடன் உடனுக்குடன் கதைத்துத் தீர்த்து வருகிறோம். அது மட்டுமல்ல கடந்த கால கட்டத்தில் விடுதலைப்புலிகள் அமைப்புக்கு பாரிய படைப்பலத்தை நாம் சேர்த்துக் கொண்டிருந்தோம். அதிலே பொறுப்பாக நாம் அனைவரும் தான் சென்று புதிய போராளிகளை சேர்த்தோம். அந்த இடத்திலே நாங்கள் எங்கள் மக்களிடம் கேட்டது ஒன்றுதான். எங்களுடைய தேசியத்தலைவருடைய காலத்திலே தமிழரது பிரச்சினைக்கு ஒரு தீர்வு வேண்டும். அதற்காக எமது இராணுவத்தைப் பலப்படுத்தவேண்டும். ஆகவே போராளிகளுக்கு உங்களது பிள்ளைகளைத் தரவேண்டும் என்று கேட்டோம். அதற்கமைவாக அவர்கள் தேசியத் தலைவரின் காலத்திலே எங்கள் பிரச்சினைக்கான தீர்வைக்காண வேண்டும் என்ற நோக்கில் தமது பிள்ளைகளை தந்தார்கள். அப்படிப்பட்ட மக்கள் எமது தலைமைப் பீடத்தில் மிகுந்த நம்பிக்கையுடனும் பற்றுறுதியுடன் இருக்கிறார்கள் என்றே நான் கூறுவேன். இதனை நாம் பல முறைபல இடங்களில் குறிப்பிட்டு வருகின்றோம். அதேபோன்று அங்கே இருக்கின்ற போராளிகளும் எங்கள் தேசியத்தலைவர் மீது அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். நாங்கள் இந்தச்செய்தியை கொடுக்கும் போது அவர்கள் மிகுந்த நம்பிக்கையும் உற்சாகமும் அடைவார்கள்.

கேள்வி:-

கிழக்கில் இருக்கின்ற மக்களுக்கு நீங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்?

★ கிழக்கில் வாழ்கின்ற மக்கள் அங்கு ஏற்பட்டுள்ள பதற்ற நிலையில் இருந்து சுமுகமான வாழ்வை நடத்த வேண்டும். நாம் எந்த இழப்புக்களும் இல்லாமல் நாங்கள் அவர்களை கையாள வேண்டும் என்பதற்காகத்தான் இங்கு தேசியத் தலைவரிடம் வந்தோம். அங்கிருக்கின்ற போராளிகளும்சரி, மக்களும் சரி, எந்தபதற்றமும் இன்றி தன்னம்பிக்கையுடன் இருக்க வேண்டும் என்று நான்அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். (லோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.